க.பொ.த.ப. (சாதாரண) பரீட்சைக்குரியது

தெளிமுறைப் பயிற்சி

# தமிழ் மொழி-பகுதி I

மாதிரி வினாவிடைப் பத்திரங்கள்

(பரீட்சைத் திணைக் களத்தினரின் புதிய திட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டது)

தயாரிப்பு
ஜீவா ஜீவரத்தினம்

குணசேன

தெளிமுறைப் பயிற்சி

**தமிழ் மொழி-பகுதி I**

க.பொ.த.ப. (சாதாரண) பரீட்சைக்குரியது

தெளிமுறைப் பயிற்சி

# தமிழ் மொழி-பகுதி I

(பரீட்சைத் திணைக் களத்தினரின் புதிய திட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டது)

தயாரிப்பு
ஜீவா ஜீவரத்தினம்

குணசேன

எம். டி. குணசேனா அன்ட் கம்பனி லிமிட்டெட்.
இல. 217, ஒல்கொற் மாவத்தை, கொழும்பு 11.

கிளைகள்:— கண்டி, காலி, நீர்கொழும்பு, அனுராதபுரம், மாத்தறை, யாழ்ப்பாணம், குருநாகல், கிரிபத்கொடை, கம்பகா, பாணந்துறை.

© 1973 ஜீவா ஜீவரத்தினம்

முதலாம் பதிப்பு 1973- அச்சிட்டுப், பிரசுரித்து வெளியிடுவோர் கொழும்பு
எம். டி. குணசேனா அன்ட் கம்பனி லிமிட்டெட்.

## பாராட்டுரை

புதிய முறையில் செய்திகளை வெளியிடுவதிலும், புதிய பல அம்சங்களை வாசகர்களுக்கு அவ்வப்போது அறிமுகஞ் செய்வதிலும் முன்னணியில் நிற்கும் தினபதி, க. பொ. த. ப. (சாதா) பரீட்சையில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்களுக்கு உறுதுணை புரியும் வகையில், வெளியிட்ட மாதிரி வினா விடைப் பத்திரங்களே இப்போது சில மாற்றங்களுடன் நூல் வடிவம் பெறுகின்றன.

இந்த வினா விடைகளைத் தயாரித்த ஆசிரியர் திரு. ஜீவா ஜீவரத்தினம் இந்தப் பணிக்கு ஏற்ற தகைமையும், திறமையும், ஆற்றலும், அனுபவமும் உடையவர் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த வினா விடைகள் தினபதியில் வெளிவந்த போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவற்றைப் பாராட்டிக் கடிதம் எழுதினார்கள். இந்த வினா விடைகளை நேர காலத்தோடு பயின்றதன் பயனைத் தாங்கள் தமிழ்மொழிப் பாடத்தில் திறமையுடன் சித்தியடைந்ததாகக் கூறி நன்றி தெரிவித்த மாணவர்களும் பலராவர்.

எனவே, இந்த வினா விடைகள், பரீட்சையில் ஒரே தடவையில் தேற விரும்பும் ஏனைய மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

திரு. ஜீவா ஜீவரத்தினத்தின் இந்த "தெளிமுறைப் பயிற்சி" நூல் வடிவில் வருவதைக் காண மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் முயற்சியைப் பாராட்டுகிறேன். இம் முயற்சிக்கு மாணவர்களுடைய ஆதரவு மட்டுமல்லாது ஆசிரியர்களுடைய ஆதரவும் பரிபூரணமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

எஸ். டி. சிவநாயகம்,
ஆசிரியர்: தினபதி.

# முன்னுரை

இந்நூலின்கட் காணப்படும் மாதிரி வினு, விடைப் பத்திரங்கள் இத்தகைய தொரு நூலுருவில் "தெளி முறைப் பயிற்சி" என்ற நாமத்தோடு வெளிவரும் என்று நான் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. 1969-ஆம், 70 ஆம், ஆண்டுகளில் க. பொ. த. ப.(சாதா.) பரீட்சையில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்க்கு உறுதுணை புரியும் பொருட்டு, "தினபதி" நாளிதழில் என்னல் தயாரித்து வெளியிடப்பட்ட மாதிரி வினு விடைப் பத்திரங்களுக்கு மாணவர், ஆசிரியர் ஆகியோரது மத்தியில் கிடைத்த வரவேற்பும் அவர்களது தொடர்ச்சியான தூண்டுதலுமே இம் முயற்சிக்கு அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன.

வினு விடைப் பயிற்சி நூல்கள் என்பன தற்காலத்தில் எப் பாடமாய் இருப்பினும் எப் பரீட்சையாய் இருப்பினும் விரைவான மீட்டற் பயிற்சிக்குச் சிறந்த துணைவர்களாய் நின்று உதவி புரிகின்றன. தங்கள் பாடப் புத்தகங்களைவிட இத்துணைவர்களையே கதியெனக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளே இன்று அதிகமாய் உள்ளனர். எனவே, அவர்கள் தங்கியிருக்கும் இவ் வினு விடை நூல்கள் பரீட்சை வேளையில், அவர்களை நட்டாற்றில் கைவிடாது பாது காத்துக் கொள்ளக் கூடியவாறு அமைந்திருக்க வேண்டியது அவசியமாகும். "தெளி முறைப் பயிற்சி" இந்நோக்கத்தைச் செவ்வனே நிறைவேற்றும் என்பதே எனது திடமான நம்பிக்கையாகும். இந்நூலில் பன்னிரு மாதிரி வினுப் பத்திரங்களும் அவற்றிற்கான விடைகளும் அடங்கியுள்ளன. சில வினுப் பத்திரங்கள் ஏற்கனவே "தினபதி"யில் வெளியானவையாகும். இவற்றிலுள்ள வினுக்களை மேவி, புதிய முறையில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட மாட்டார்கள் என்ற காரணத்தினுலேயே இவ்வினுப் பத்திரங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இவற்றைத் தங்கள் வழி காட்டிகளாக ஆக்கிக் கொண்ட பரீட்சார்த்திகளுள் தொண்ணூறு சத விகிதத்தினர் திறமைச் சித்தி பெற்றமை மேற்படி வினுப் பத்திரங்களை இந் நூலில் சேர்த்துக் கொண்டமைக்கு பிறிதொரு காரணமாகும்.

வினுக்களுக்கான விடைகளைப் பொறுத்தவரை சகல விடைகளும் இலக்கண மரபு கருதியே தரப்பட்டுள்ளன. பிரதேச மரபு, அதாவது, மண் வளச் சொற்கள் பெரும் பாலும் நீக்கப்பட்டுள்ளன. இங்கு மட்டக்களப்புத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மதருஸ் தமிழ் என்பனவற்றிற்கு இடமே கிடையாது.

ஒவ்வொரு விடைக்குமான விளக்கத்தை இந்நூலில் சேர்த்துக் கொள்வது பயன்தரக் கூடிய தொன்றென நான் விரும்பியபோதிலும் கால அவகாசம், விரிவினுல் ஏற்படக் கூடிய விலையுயர்வு போன்றவற்றை கருத்திற் கொண்டு இந்த முதற் பதிப்பில் அதனைத் தவிர்த்

துள்ளேன். ஆசிரியப் பெருந்தகைகள், அறிஞர் பெருமக்கள், மாணவ மணிகள் ஆகியோரிடமிருந்து நான் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளத் தக்க கண்டனங்களை ஆதாரமாகக் கொண்டு அடுத்த பதிப்பில் இவ் விளக்கத்தைத் தரலாமென நம்புகிறேன். எது எப்படி இருப்பினும், தமிழ் மொழி பிரதேசவாரியாகவன்றி இலக்கண மரபுப்படி பாது காக்கப்பட வேண்டியதென்பதைத் தமிழ் கற்பிக்கும் எனது ஆசிரியத் தோழர்களுக்குப் பணிவோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பயிற்சி நூலில், ஒரு வினாப் பத்திரத்தில் காணப்படும் ஒரு குறிப் பிட்ட வினா அல்லது பல வினாக்கள் பிறிதொரு வினாப் பத்திரத்திலும் பயின்று வரல் காணலாம். இது தவறுதலாக ஏற்பட்டதன்று. பரீட் சார்த்திகள் திறமையாகப் பயிற்சி பெற்று விசேட சித்தி பெற வேண்டு மென்பதற்காகவே ஒரு சில குறிப்பிட்ட வினாக்களை பல்வேறு இடங் களில் சொருகியுள்ளேன். என்னுடைய இந்த எண்ணம் உளவியலின் பாற்பட்டதாகும்.

எந்த வினா விடை நூலிலும் காணாதவாறு பரீட்சார்த்திகள் திறமைச் சித்தி பெறத் தக்க வகையில் சில ஆலோசனைகள் இந்நூலின் ஆரம் பத்தில் தரப்பட்டுள்ளன. என் மீது அபிமானமிக்க மாணவ மணி களுக்கு ஈதொரு வழிகாட்டியாக அமையுமென்பது எனது ஆசிரிய அநுபவரீதியிலான அபிப்பிராயமாகும்.

இப் பன்னிரண்டு மாதிரி வினா விடைப் பத்திரங்களையும் "தெளி முறைப் பயிற்சி" என்ற நூலுருவில் வெளியிடுவதற்கு உறுதுணை புரிந்தவரும், இதற்கு அணிந்துரை வழங்கியுள்ளவருமான "தினபதி" ஆசிரியர் உயர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்களுக்கும், இதனை நன் முறையில் அச்சேற்றி வெளியிடும் திருவாளர்கள் எம். டீ. குணசேன கம்பெனியாருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்களும் அதனைத் திறம் படக் கற்பிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளும் இதனை வரவேற்றுப் பயனடைவார்களாயின் அதுவே எனது முயற்சியின் வெற்றியாகும்.

வணக்கம்.

— ஜீவா ஜீவரத்தினம்

*துறைநீலாவணை*
*கல்முனை*

# சிறப்புச் சித்தி பெறச் சில ஆலோசனைகள்

தமிழ் மொழி முதலாம் பகுதியைப் பொறுத்தவரையில் இவ்வினாப் பத்திரம் ஏறக்குறைய எண்பது புதிய முறை வினாக்களைக் கொண்டதாயிருக்கும் என்பது நீங்கள் அறிந்த விடயமாகும். இப்பத்திரத்திற்கு விடையளிப்பதற்கான காலவரையறை நாற்பது நிமிடங்கள் மட்டுமே.

பெருந்தொகை வினாக்களுக்குக் குறுகிய காலவரையறைக்குள் விடையளிக்க வேண்டியிருப்பதால் பல பரீட்சார்த்திகள் தன்னம்பிக்கையை இழந்து விடுகின்றனர். இந்த உளவியல் தாக்கம் பலரின் தோல்விக்கு நெடுஞ்சாலை அமைத்து விடுகின்றது. போதிய பாட ஆயத்தமுள்ள பல பரீட்சார்த்திகள் கூட இதனால் சித்தியடையத் தவறி விடுகின்றனர்.
ஆகவே,

(1) தன்னம்பிக்கைதான் வெற்றிக்கு முதற்படி என்பதை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நன்குணர வேண்டும்.

(2) எல்லா வினாக்களையும் ஒருமுறை வாசித்துவிட்டு அதற்கப்புறம் தான் விடையிறுப்பது என்று ஆரம்பித்தால் வினாக்களை வாசிப்பதற்கு மட்டுமே நேரம் சரியாக இருக்கும். தமிழ் மொழி முதலாம் பகுதியைப் பொறுத்தவரையில் வினாப்பத்திரம் உங்கள் கைகளுக்கு வந்ததும் சுட்டிலக்கத்தை இட்டுக் கொண்டு உடனேயே விடையிறுக்க ஆரம்பித்துவிட வேண்டும்.

(3) வினாக்களுக்கு விடைகள் எம்முறையில் இறுக்கப்பட வேண்டுமென்ற பரீட்சகரின் அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு விடையிறுக்க ஆரம்பிப்பது மிக மிக முக்கியமாகும். உதாரணமாக, "சரியான விடையின் கீழ் கீறிடுக", "இடைவெளி நிரப்புக", "உரிய இலக்கம் இடுக" போன்ற அறிவுறுத்தல்களைக் குறிப்பிடலாம்.

(4) நிச்சயம் விடை தெரிந்த வினாக்களுக்கே முதலில் விடையிறுக்க வேண்டும். அதன் பின்னர்தான் சந்தேகத்திற்கிடமான விடைகளைப் பற்றிச் சீர்தூக்க வேண்டும். சந்தேகம் வலுப்பெற்றால் அவ் வினாவுக்கு விடையிறுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

(5) பல தனி வாக்கியங்களை ஒரே வாக்கியமாய் மாற்றி எழுதல், தொடர்களைப் பிரித்தெழுதல், ஒழுங்கான வாக்கியத்தின் முன்னால் அடையாளமிடுதல், குறியீடுகள் இடுதல் சம்பந்தமான வினாக்களுக்கு ஆரம்பத்தில் விடையிறுப்பதைத் தவிர்த்துக் கொண்டு ஏனைய வினாக்களுக்கே விடையிறுக்க வேண்டும்.

அடுத்தபடியாகவே மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையிறுக்க வேண்டும்.

(6) தொடர் வாக்கியமாய், அதாவது, ஒரே முற்றுவினை கொண்டு முடியத்தக்கதாய் மாற்றி எழுதுவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தரப்பட்ட தனி வாக்கியங்களிலுள்ள பொருள் மாறுபடாதிருக்க வேண்டியது முக்கியமாகும். இவ்வினா உங்களுடைய வெளிப்படுத்தும் திறனைப் பரீட்சிக்கும் ஓர் அளவு கோலாகும்.

(7) சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடப்பட வேண்டிய வினாவாக இருந்தாலும் சரி, இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டிய வினாவாக இருந்தாலும் சரி, சரியான விடையென்று நிச்சயிக்கப்பட்டு அது இறுக்கப்பட்ட பின் மீண்டும் அதை வெட்டி திருத்தி விடை பத்திரத்தை அலங்கோலம் செய்வதும் உங்கள் தோல்விக்கு ஒரு காரணமாய் அமையலாம். அச்செயல் பரீட்சகருக்கு உங்கள் பலவீனத்தைக் காட்டிக் கொடுத்துவிடும். விடைப் பத்திரம் புனிதம் கெடாமல் இருக்கப் பார்த்துக் கொள்வது உங்கள் கடமையாகும்.

(8) இவ்வினாப் பத்திரம் உங்களது மொழித்திறன் (அதாவது சொற்பிரயோகம், கிரகித்தற் திறன், வெளிப்படுத்தும் திறன்) சம்பந்தமான வினாக்களை மட்டுமல்லாது அடிப்படை இலக்கண அறிவை மட்டிடும் வினாக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

சிலர் மொழித்திறன் சம்பந்தப்பட்ட வினாக்களுக்கு மட்டும் விடையிறுத்து விட்டு ஏனைய வினாக்களை விட்டு விடுகிறார்கள். ...இச்செயல் அவர்களது தோல்விக்கு மேலும் ஒரு காரணமாய் இருக்கிறது. ஜி. ஸி. ஈ. பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு அடிப்படை இலக்கண அறிவில்லாதிருப்பது வருந்தத்தக்கது.

இலக்கண அறிவை மட்டிடுபவை நேரடி வினாக்களாக இருக்கின்றபடியால் பரீட்சார்த்திகளுக்கு இவ்விடயத்தில் திட்டவட்டமான அறிவு இருக்க வேண்டும்.

(9) விடய அறிவு, விவேகம் இவற்றைவிட விரைவும் முக்கியமாக வேண்டப்படுவதொன்றாகும். கடிகாரத்தோடு போட்டி போட்டு விடையிறுக்க வேண்டிய பரீட்சார்த்திகளுக்கு இந்த விரைவு இல்லாவிட்டால் எல்லா வினாக்களுக்கும் விடையிறுக்க முடியாது போய் விடும். திட்டவட்டமாக விடை தெரிந்த எத்தனையோ வினாக்களுக்கு விடையளிக்கத் தவறி விடுவது விரைவின்மையேயாகும்.

(10) பரீட்சை மண்டபத்தில், வினாத்தாளை எதிரே வைத்துக் கொண்டு, பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் எத்தனையோ பரீட்சார்த்திகளை இன்னும் காணக்கூடியதாக இருக்கிறது. நீங்கள் அவமே கழிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மதிப்பெண்ணை இழந்து விடுவீர்கள் என்பது உங்கள் நினைவில் இருக்க வேண்டியது அவசியம்.

மேற்கூறிய பத்து ஆலோசனைகளையும் அனுசரித்துப் பரீட்சை மண்டபத்தில் நடந்து கொள்வீர்களானால் நீங்கள் திறமைச் சித்தியடைவது நிச்சயம்.

## மாதிரி வினப்பத்திரம்—1.

### ஜி. ஸீ. ஈ. சாதா. பரீட்சை.

### தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:- 40 நிமிடம்

*(எல்லா விஞக்களுக்கும் இவ்விஞத்தாளிலேயே விடை தருக.)*

பின்வரும் உரைப்பகுதியில் கீறிடப்பட்ட இடங்களோடு தொடர்புடைய விஞக்களும் அவற்றுக்கான பல விடைகளும் இதனடியில் தரப்படுகின்றன. ஒவ்வொரு விஞவுக்குமுரிய விடைகளுட் சரியானதைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

மனச்சாட்சி எனக் கூறப்படும் உளப்பண்பு ஒருவனது வாழ்க்கையில் அவனுக்குண்டாகும் வறுமையிலும் செம்மை அளிக்கின்றது. தீயிடை இடப்பட்ட தங்கம் தன் சிறப்பை மென்மேலும் உயர்த்திக் கொள்ளும் நீர்மை விசித்திரம் என்பதோ? நாம் ஈண்டு குறிப்பிடும் உளப்பண்பு ஒருவனது துன்ப நிலையில்தான் துலங்குகின்றது. ஆகவேதான் ஒருவனது மனச்சாட்சியை அளக்கப் பயன்படுத்துமோர் அளவுகோலாகத் துன்பத்தையும் மனித வாழ்க்கையோடு இறைவன் இணைத்துள்ளார். செம்மை காப்போர் துயரத் தீயின் வெம்மையில் வெந்து தண்மையில் மேம்படுகின்றனர். தற்காலிக நிறைவு கருதி மனச்சாட்சியை விலை பேசுவோர் இறைவன் விருப்பிற்கு மாறுபடுகின்றனர்.

விஞக்கள்:-

1. செம்மை என்பது (சிவப்பு, சிறப்பு, செல்வம்) என்னும் பொருளில் வந்துள்ளது.

2. தீயிடை என்ருல் நெருப்பின் (மேல், மத்தியில், கீழ்) எனப் பொருள்படும்.

3. மென்மேலும் என்பதற்கு (இடைக்கிடை, இன்னுமின்னும், மெல்ல மெல்ல) என்பது பொருளாகும்.

4. நீர்மை என்பது (தண்ணீர், தன்மை, பழக்கம்) ஆகும்.

5. ஈண்டு என்ருல் (இங்கு, முன்னர், பின்னர்) எனப் பொருள்படும்.

6. துலங்குகின்றது என்பதற்கு (விளங்குகின்றது, மங்குகின்றது, பொங்குகின்றது) என்பது எதிர்ச்சொல்லாகும்.

7. பயன்படுத்துதல் என்றால் (பண்படுத்துதல், பாவித்தல், பிரயோகித்தல்) எனப் பொருள்படும்.

8. இணைத்தல் என்பதற்கு (தொடுத்தல், பிரித்தல், அணைத்தல்) என்பது எதிர்ச்சொல்லாகும்.

9. வெம்மைக்கு எதிர்ச்சொல் (தன்மை, தண்மை, தனிமை) ஆகும்.

10. தற்காலிகம் என்றால் (உடனுக்குடன், நிரந்தரமற்ற, வேண்டும் பொழுது) எனப் பொருள்படும்.

*11–20* இவ்வுரைப் பகுதியில் "அருமை" என்னும் பண்படியாகப் பிறந்த சில சொற்கள் பல்வேறு பொருளில் வருகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று கருத்துக்கள் அடைப்புக் குறிக்குட் கொடுக்கப்பட்டுள்ளன. அவை வரும் இடம் நோக்கி அவற்றுட் சிறந்த பொருள் எதுவெனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என ஔவைப் பிராட்டி கூறிப் போந்த அரியமொழி வாழ்வில் விரக்தி அடைந்தோர் பலருக்கு ஒவ்வாதெனப் பலர் கூறலாம். மனித சமுதாயத்தில் அருகி வரும் ஆன்மீக சிந்தனை இக்கூற்றுக்கோர் அருஞ்சான்று. அல்லும் பகலும் அருந்தவம் புரிவதாய்க் காட்டிக் கொள்ளும் முனிவர்கள் கூட மனிதப் பிறவியை மதியாதவராகவே காணப்படுகின்றனர். இன்றைய உலகில் அரும்பெரும் சாதனைகள் புரிந்து வரும் விஞ்ஞானிகள் கூட இறைவன் தந்த ஆருயிரை மதியாது அதனை விபத்துக்களுக்குப் பலியாக்கச் சித்தமாயுள்ளனர். அருமறைகள் கூறும் பெருவாழ்வை மேற்கொண்டோரின், அருஞ்செயல்களை உதாரணமாய்க் கொண்டோர் அரிய வாழ்வடைவர் என்பது நிச்சயம்.

11. அரிதரிது (குறைவு, மேன்மை, அபூர்வம்)

12. அரியமொழி (கருத்துள்ள மொழி, நன்மொழி, அபூர்வமான மொழி)

13. அருகிவரும் (குறைந்துவரும், நெருங்கிவரும், நிலவி வரும்)

14. அருஞ்சான்று (பொருத்தமான, மிகக்கூடிய, நல்ல) சான்று.

15. அருந்தவம் (நிலையான, மேலான, உண்மையான) தவம்.

16. அரும்பெரும் சாதனைகள் (விசித்திரமான, சிறப்பான, எவராலும் செய்ய முடியாத) செயல்கள்.

17. ஆருயிர் (விலைமதிக்க முடியாத, நிலையான, உயர்வான) உயிர்.

18. அருமறைகள் (நன்மையான, சிந்திக்கத் தூண்டும், மனித வாழ்வுக்குகந்த) மறைகள்.

19. அருஞ்செயல்கள் (சாதனைகள், வீரம், திறமை)

20. அரிய வாழ்வு (கஷ்டமற்ற, சீரான, பொருள் பண்டம்மிக்க வாழ்வு)

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

21. மாணவர்க்கு விவசாயத்தில் (பயிற்ச்சி, பயிற்சி, பயிர்ச்சி) அளிக்கக் கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

22. அடுப்பிலிருந்த (மட்பானை, மண்பானை, மற்பானை) உடைந்து விட்டது.

23. குணங் கொண்டு (குற்ரம், குற்றம், குட்றம்) நீக்கல் கற்றூர் கடனுகும்.

24. அயராது பாடுபட்டு (வாழ்கையில், வாட்கையில், வாழ்க்கை யில்) முன்னேறினுன்.

25. காதறுந்த (தோற்செருப்பு, தோல்செருப்பு, தோல்ச் செருப்பு) குப்பை மேட்டில் கிடக்கிறது.

26. கடாவுக்கு மறிபோல எருதுக்கு (பசு, பிணை, பிடி)

27. பாம்பு சீறும்; பல்லி (கத்தும், சொல்லும், கீச்சிடும்)

28. பல்லுக்கு வரிசைபோல பூவுக்கு (சோலை, மாலை, கொத்து)

29. வாழையின் இளையது குட்டி; (யானையின், புலியின், மானின்) இளையது போதகம்.

30. நெல்லின் உள்ளீடு அரிசி; கற்றூளையின் உள்ளீடு (சதை, சுளை, சோறு)

31. பாண்டியன் படை போரில் (வென்றன, வென்றது, வென்றனர்)

32. ஒவ்வொரு மாணவரும் (தங்கள், தமது, தத்தமது) கடமை யைச் செவ்வனே ஆற்ற வேண்டும்.

33. பத்துப் பரீட்சார்த்திகளுள் ஆக (இருவரும், இருவர், இரு வரே) சித்தி பெற்றனர்.

34. களைத்து வந்தவனுக்குத் தண்ணீர் (உண்ண, பருக, சாப்பிட)க் கொடுத்தனர்.

35. நேற்று நீ பட்டணத்துக்குப் போயிருந்தாய் (அல்லவா, இல்லையா, அல்லையா)?

ஒழுங்கான வாக்கியத்தின் முன்னால் √ என்ற குறியீடு இடுக.

36. அ. மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதீர் ......................

ஆ. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதீர் ..................

37. அ. மூன்று அரசரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் ......

ஆ. அரசர் மூவரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் ......

38. அ. அவர் என்னிடம் விலைக்கு வேண்டிய கோழி இறந்து விட்டது ......... ......

ஆ. அவர் என்னிடம் விலைக்கு வாங்கிய கோழி இறந்து விட்டது ....................

39. அ. செத்தாலும் உன்னோடுதான் சாவதாக எனது நண்பன் என்னிடம் கூறினான் ...............

ஆ. தான் செத்தாலும் என்னோடுதான் சாவதாக எனது நண்பன் என்னிடம் கூறினான் ........................

40. அ. அவனது பழுதடைந்த கையிலுள்ள கடிகாரத்திலிருந்து சரியான நேரத்தை அறியமுடியவில்லை ............

ஆ. சரியான நேரத்தை அவனது பழுதடைந்த கடிகாரத்திலிருந்து அறிய முடியவில்லை ............

பின்வரும் வாக்கியங்களிற் கீறிடப்பட்ட வினைச் சொற்களுக்குப் பதிலாக வேறு வினைச் சொற்கள் தருக.

உதாரணம்: அவர் நாளை ஏகுவர்... போவார்.

41. தூரக்கடல் சென்ற மீனவர் இன்றுதான் மீண்டனர் ............

42. பாலை உண்ணுநின்ற குழந்தை மகிழ்வுற்றது .........

43. மென்மலர் அமளிமிசைத் துயின்றனர் ............

44. இறைவனை ஏத்தி வணங்கார் இருந்து பயனென்ன? .........

45. சிந்தை பிறழ்ந்தோர்க்கு புத்தி தெருட்டினான் ............

பின்வரும் உரைப் பகுதியிலுள்ள சொற்களைச் சந்தி சேர்த்து எழுதுக. ஒவ்வொரு சந்திக்கும் கொடுக்கப்பட்ட இலக்கத்திற் சந்தி சேர்க்கப்பட்ட புதிய வடிவத்தைத் தருக.

தலைக்கு (46) உவமை இல்லாதான் (47) தாள் சேர்ந்தார்க்கு (48) அல்லால் மனக்கவலை மாற்றல் (49) அரிது (50) என நமது (51) தமிழ்வள்ளுவன் செம்மை (52) தமிழில் (53) கூறிப் போந்தான்.

46 .................. 49. .................. 52. ..................

47. .................. 50. .................. 53. ..................

48. .................. 51. ..................

பின்வரும் தனி வாக்கியங்களை ஏற்ற வண்ணம் மாற்றி ஒரே முற்றுவினை கொண்டு முடியத் தக்கதாய் எழுதுக:—

54. வடபுலத்து மன்னர் இருவர் தமிழைப் பழித்தனர்.
55. இச்சேதி சேரன் செங்குட்டுவனுக்கு எட்டியது.
56. இவன் தமிழ்மீது அதிக பற்றுள்ளவன்.
57. சேதியைக் கேட்ட சேரனுக்குச் சினமூண்டது.
58. தனது படைகளைத் திரட்டினன்.
59. அப் படைகளோ மிகவும் வலிமை மிக்கன.
60. அவை தோல்வியையே அறியாதவை.
61. வடபுலத்து மன்னரைப் பழிவாங்கத் துடித்தான்.
62. படைகளை வடபுலம் நோக்கி நடத்தினன்.

54. – 62 .................. .................. ..................

.................. .................. .................. ..................

.................. .................. .................. ..................

.................. .................. .................. ..................

பின்வரும் உரைப் பகுதியிலே கீறிடப்பட்ட சொற்களின் பொருளை அவ்வற்றுக்குரிய இலக்கத்தின் நேரே எழுதுக:—

தோழியை நீங்கித் தனிவழிச் (63) சேறலும் தன்னால் (64) ஆற்றாது எனக்கண்ட தலைவி அவளைக் (65) கடிந்து பேசினள். அவளோ (66) நகைத்தாள் (67) ஆண்டு தலைவியின் பின்னால் (68) கொற்றவன் மைந்தன் அக்கோதையைத் (69) தீண்டுதலுற்றான்.

63. .................. 67. ..................

64. .................. 68. ..................

65. .................. 69. ..................

66. ..................

பின்வரும் உரைப் பகுதியைப் படித்துக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

'தகதகக்கும் தண்ணீரின் அலைகள்; அதற்கப்பால் – வெகு தொலை வில் – மெல்லிய காற்றில் உலர விரித்துவிட்ட பச்சைச் சேலையின் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பரந்து கிடக்கும் வயல் வெளி; இவற்றுக்கு அரணாய் விளங்கும் கருமலைத் தொடர்; மலைகட் கெல்லாம் மத்தியில் விளங்கும் அதி உயர்ந்த மலை தன் சிரசிலே செம் பொற்கிரீடமொன்றை அணிந்திருந்தது. இன்னும் சில நொடிப் பொழுதில் அக்கிரீடம் மலையின் முதுகைத் தடவியவாறே மெல்லென நழுவிக் கீழே உருண்டு விடும்.

வினா:—

70. கருமலைத்தொடர்.................. 71. ........................ என்பனவற்றுக்கு அரணாய் விளங்குகின்றது.

72. இது (காலை, மாலை)க் காட்சியாகும். 73. செம்பொற் கிரீடம் எதற்கு உருவகமாகின்றது? ....................

74. "கிரீடம் மலையின் முதுகைத் தடவியவாறு கீழே நழுவி விடும்" என்றால் என்ன? ...................... ......................

................... ................... ................... ...................

................... ................... ................... ...................

................... ................... ................... ...................

75. இக்காட்சி (அழகு, அங்கதம், சோகம்) மிக்கதாகும். (சரியான விடையின் கீழ்க் கீறிடுக.)

76 – 80 வரையுள்ள வினாக்களின் கருத்துக்களுக்குப் பொருத்தமான மரபு மொழியை அடைப்புக் குறிக்குள் உள்ளவற்றிலிருந்து தெரிந் தெடுத்து அவற்றின் கீழ்க் கீறிடுக.

76. வீணாக ஒருவரை அலைக்கழித்தல் (தாளம் போடுதல், தொய் யப் போடுதல், பம்பரமாட்டுதல்)

77. தனது துன்பத்தையே ஓயாது சொல்லித்திரிபவன் (பஞ்சம் கொட்டுபவன், பண்பட்டவன், வம்பளப்பவன்)

78. ஒன்றை முற்றாய் அறிந்தவன் (கட்டுப்பெட்டி, கரைகண்டவன், ஆழம்பார்ப்பவன்)

79. பலரும் அறிந்த ஒருண்மையைப் பொய்யாக்குவதற்கு பல தந்திரங்கள் அறிந்தவன் (கணக்கு விடுபவன், கங்கணம் கட்டுபவன், கள்ளோடு விடுபவன்)

80. ஒருவரின் வாழ்க்கையைக் கெடுத்தல் (வாயைக் கட்டுதல், மொட்டையடித்தல், வயிற்றிலடித்தல்)

## மாதிரி விஞப்பத்திரம்—2.

### ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை.
### தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:— 40 நிமிடம்.

இவ்விஞத் தாளிலேயே விடை தருக.

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களின் விரிவான பொருள் இதனடியில் தரப்பட்டுள்ளது. அப்பொருளையுடைய சொல்லைக் கீறிடப்பட்ட சொற்களில் இருந்து தெரிந்தெடுத்து அவற்றின் நேரே எழுதுக.

மேற்கு வானின் செம்பஞ்சுக் குழம்பு பூசிய முகம் மெல்ல மெல்லத் தன் காந்தியை இழந்து கருகி வருகிறது. அந்த இளைஞன் இன்னும் அந்தப் பொய்கைக் கரையில்தான் இருக்கிருன். வெகு தொலைவில் தெரியும் வீட்டின் பலகணி திறந்திருப்பது பட்டும் படாமல் தெரிகிறது. கூர்ந்து நோக்கிஞல் சத்திரம் போலவே தென்படுகிறது. உண்மையில் சத்திரமாகவே இருந்தால் சிரமம் எதுவுமின்றி இராப்பொழுது கழிந்துவிடும். அவ்விடத்தை நாடும் தீர்மானம் வலுப்பெறுகிறது. எழுந்து நடைப்பிணம் போல் செல்கிருன்.

1. மிகவும் நுட்பமாக ..........................
2. வழிப் போக்கர் தங்கிச் செல்லுமிடம் ..........................
3. தெளிவில்லாமல் .......................... ............
4. பெண்கள் தம் நகங்களில் தீட்டும் செந்நிறக் கலவை ............
5. காற்ருேட்டத்திற்காக வீட்டின் சுவர்களில் பொருத்தப்படும் சிறு வாசல் ..........................
6. எண்ணத்தின் முடிவு ..........................
7. பிரகாசம் ..........................
8. உயிர் இருந்தும் இல்லாதது ..........................
9. சிறியதொரு நீர் நிலையம் ......................
10. கஷ்டம் ......................

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களோடு தொடர்புடைய வினுக்களும் அவற்றுக்கான பல விடைகள் அடைப்புக் குறிக்குள்ளும் தரப்படுகின்றன. சரியான விடையின் கீழ் கீறிடுக.

மனோகரமான மாலே வேளே ஒன்றிலே ஆழிக்கரையின் மருங்கிலே அமர்ந்திருந்த பாரதியார் இயற்கை அன்னேயின் எழிலில் ஈடுபட்டுத் தம்மை மறந்து விடுகிறுர். மேலே வானிலே பரிதி தன் கதிர்க்கரங்களால் வெண்முகிற்படாத்தில் ஏழு வண்ணங் கொண்டு கணந்தோறும் அழித்தழித்துத் தீட்டுகின்ற சித்திரக் காட்சி அவர் மனத்தை மயக்குகின்றது.

11. ஆழி என்பது (ஆழம், கடல், குளம்) ஆகும்.

12. மருங்கு என்றுல் (அண்மை, சேய்மை, நடு) எனப் பொருள் படும்.

13. எழில் என்பது (தூய்மை, அழகு, கவர்ச்சி) ஆகும்.

14. மறந்து என்பதற்கு (துணிந்து, எழுந்து, நினேந்து) என்பது எதிர்ப்பதமாகும்.

15. மேலே என்பது (இடத்தை, பொருளே, காலத்தை)க் குறிக்கிறது.

16. பரிதி என்பது (முகில், சந்திரன், சூரியன்) ஆகும்.

17. வெண்முகில் (உவமை, பண்பு, வேற்றுமை)த் தொகை.

18. படாம் என்பது (திரை, படங்கு, சீலே) ஆகும்.

19. கணம் (நிறத்தை, தன்மையை, நேரத்தை)க் குறிக்கிறது.

20. மயக்குகின்றது (எதிர், நிகழ், இறந்த) கால வினேமுற்று.

பின்வரும் தொடர்களேப் பிரித் தெழுதுக.

21. பற்றற்றிரு ..................................

22. கற்ரு ......................................

23. தோணலங்காணீர் ..................................

24. அஃறிணே ..................................

25. எட்டுணே ............................

(சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.)

26. இளந் தென்றல் (குளிற்சியாய், குளிர்சியாய், குளிர்ச்சியாய்) வீசுகின்றது.

27. சிங்கம் (பாண்கிணற்றை, பாழ்ங்கிணற்றை, பாங்கிணற்றை) எட்டிப் பார்த்தது.

28. மன (மகிழ்சி, மகிட்சி, மகிழ்ச்சி) கொண்டேன்.

29. (பால்குடம், பாற்குடம், பால்க்குடம்) உடைந்தது.

30. (மூர்ச்சித்து, மூச்சிர்த்து, மூச்சித்து) வீழ்ந்தார்.

31. கூனனுக்குக் கூனிபோல தச்சனுக்குத் (தச்சி, தச்சை, தச்சிச்சி)

32. குயில் கூவும்; தேனி (சுத்தும், உறுமும், ரீங்காரம் செய்யும்)

33. குதிரை கனைக்கும்; சிங்கம் (சீறும், பிளிறும், கர்ச்சிக்கும்)

34. புல்லுக்குக் கற்றைபோல, நூலுக்கு (கட்டு, பந்து சுற்றை)

35. தென்னைக்குப் பிள்ளைபோல, பனைக்கு (வடலி, குட்டி, கன்று)

36. எனது இரு (கால்கள், காலும், கால்களும்) வலிக்கின்றன.

37. நீரோடை (கலகல, சடசட, சலசல) என ஓடிற்று.

38. (பொலபொல, கடகட, மடமட)வெனக் கண்ணீர் உகுத்தான்.

39. மனித வர்க்கம் (பெருகுகின்றது, பெருகுகின்றனர், பெருகுகின்றன).

40. புலி வருகிறான் என்றால் (புலி என்பவன், புலி போன்றவன், புலி என்னும் பெயரையுடையவன்) வருகிறான் எனப் பொருள் படும்.

41. சேர, சோழ, பாண்டியர் என்னும் தொடர் (உம்மை, உவமை, வேற்றுமை)த் தொடராகும்.

42. பரீட்சையில் நான் சித்தியடைந்ததைக் கேள்வியுற்ற எனது தாய் (உச்சி குளிர்ந்தாள், கொடுக்குக் கட்டினாள், தலைகவிழ்ந்தாள்).

43. ஆபத்து வேளையில் (கைகொடுத்து, கையெடுத்து, கைவைத்து) உதவினான்.

44. ஆசிரியர் அவனுக்கு உபதேசித்ததெல்லாம் (வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல, வைக்கோற்பட்டடை நாய்போல, விழலுக்கிறைத்த நீர்போல) பயனற்றுப் போயிற்று.

45. அவர்கள் இருவரும் (நகமும் சதையும் போல, நாயும் பூனையும் போல, கீரியும் பாம்பும் போல) ஐக்கியமாய் இருக்கிறார்கள்.

ஒழுங்கான வாக்கியத்தின் முன்னால் √ என்று அடையாளமிடுக.

46. அ. நானொரு பையனொருவனைக் கண்டேன் ....................

ஆ. நானொரு பையனைக் கண்டேன் ........................

47. அ. அவன் ஓர் அரசன் ........................

ஆ. அவனொரு அரசன் ........................

48. அ. இக்குற்றம் புரிந்தது யார் ........................

ஆ. இக்குற்றம் புரிந்தவர் யார் ........................

49. அ. அமைச்சர் அடிக்கல் நாட்டினார் ........................

ஆ. அமைச்சர் அடிகல் நாட்டினார் ........................

50. அ. திருடன் பற்றை மறைவில் ஒழிந்து கொண்டான் .........

ஆ. திருடன் பற்றை மறைவில் ஒளிந்து கொண்டான் .........

"அ" பிரிவிலுள்ள ஒவ்வொன்றுக்குமுரிய ஒவ்வோர் உதாரணம் "ஆ" பிரிவிலுள்ளது. சரியான உதாரணத்தைக் கண்டு அதன் முன்னாலுள்ள அடைப்புக் குறியுள் உரிய இலக்கமிடுக.

"அ"

51. ஒற்றளபடை.

52. முதற்போலி.

53. குறிப்பு வினையெச்சம்.

54. மென்றொடர்க் குற்றியலுகரம்.

55. உவமைத் தொகை.

56. இழி வழக்கு.
57. தகுதி வழக்கு.
58. தொகைக் குறிப்புச்சொல்.
59. எண்ணலளவை யாகுபெயர்.
60. விட்டவாகு பெயர்.

"ஆ"

( ) சிவந்து
( ) பாவக்காய்
( ) ஐவர் ஆண்டனர்
( ) ஊர் வந்தது
( ) இலங்கு வெண்பிறை
( ) கால் வலித்தது
( ) ஒன்றுக்குப் போதல்
( ) அய்யர்
( ) சங்கு
( ) மதிமுகம்.

பின்வரும் வாக்கியங்களிற் கீறிடப்பட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருள் கொடுக்கும் வேறு சொற்கள் தருக.

61. அப்பெண் வைகறையில் துயிலெழுவாள் ......................
62. அருச்சுனனின் அத்திரம் உயிர் குடித்தது ......................
63. இரவுக்கு முன் இல்லம் மீண்டான் ..............................
64. தாரகைகள் கண் சிமிட்டின ..........................
65. யாரோ வரும் அரவம் கேட்கிறது ..........................

பின்வரும் தனிவாக்கியங்களை அவற்றின் பொருள் வேறுபடாது ஏற்றவண்ணம் மாற்றியமைத்து ஒரே முற்றுவினை கொண்டு முடியத் தக்கதாய் எழுதுக.

66. இரண்டாஞ் சாமக் கோழி கூவுகிறது.
67. புலவர் அதைக் கேட்கிறார்.
68. படுக்கையினின்றும் எழுகிறார்.
69. வெளியில் வந்து பார்க்கிறார்.
70. சிறு தொலைவில் அந்த நதி நிலவொளியில் பளபளக்கிறது.
71. யாரோ நீராடுவது தெரிகிறது.

72. புலவர் கால்களும் நதியை நோக்கி நடக்கின்றன.

66. — 72. ..................................................................

..................................................................

..................................................................

..................................................................

..................................................................

பின்வரும் உரைப் பகுதியைப் படித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.

திருப்பதி முதலிய ஸ்தல யாத்திரை செய்பவர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். சிலரால் தங்களுக்குத் திருப்தி உண்டாகும்படி தரிசிக்க முடிவதுமில்லை. ஆனால், அவர்கள் விரும்பாமலே, தங்கள் தங்கள் அங்கவீனங்களையும் வறிய நிலைமையையும் திறமைகளையும் விளம்பரப்படுத்திக் காட்டும் யாசகர்களுடைய தரிசனம் கிடைப்பது தவறுவதில்லை. எந்த ஸ்தலத்திலும் இந்த யாசகர்களின் காட்சிகள் உண்டு. உலகத்தில் மனிதருடைய அங்கங்களில் எத்தனை விதமான கோணல்கள் உண்டோ அத்தனை கோணங்களுக்கும் ஸ்தலங்கள் காட்சிச்சாலைகளாக இருக்கின்றன. உண்மையாகவே துன்பப்படும் பிச்சைக்காரர்கள் ஒரு புறம் இருக்க நன்றாக இருக்கும் தங்கள் உடம்பில் உள்ள அங்கங்களை விகாரமுள்ளவை போலச் சில தந்திரங்களால் தோற்றச் செய்து பணம் பறிக்கும் வஞ்சகர்களான சோம்பேறிகளையும் அவ்விடங்களிலே பார்க்கலாம்.

வினாக்கள்:—

73. யாத்திரை செய்வோருக்கு ........................ கிடைக்காவிட்டாலும்

74. அவர்கள் .................. களைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

75. ஸ்தலங்கள் எவற்றுக்கு உருவகிக்கப்படுகின்றன ...............

76. அங்கம் என்பது (உடலை, கைகால்களை, உறுப்பை)க் குறிக்கும்.

சரியான விடையின் கீழ் கீறிடுக.

77. இப்பந்திக்கு ஒரு தலையங்கமிடுக ........................

78. அங்கங்களை விகாரமாக்க எவை பயன்படுகின்றன? ............

..................................................................

79. பணம் பறிக்கும் வஞ்சகர்களை உரையாசிரியர் யாவரெனக் கூறுகிறார்? ........................

80. இவ்வுரைப் பகுதி எத்தகைய உணர்ச்சியைக் கொடுக்கிறது? .................. ................ (வீரம்/வெறுப்பு/சிரிப்பு).

## மாதிரி வினாப்பத்திரம்—3.

### ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை

### தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:— 40 நிமிடம்

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக)

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களோடு தொடர்புடைய வினாக்களும் அவற்றுக்கான பல விடைகள் அடைப்புக் குறிக்குள்ளும் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ்க் கீறிடுக.

அந்தி மயங்கும் வேளை; தெருவிளக்கெல்லாம் ஏற்றப்பட்டுவிட்டன. பனியானது விளக்குகளைச் சுற்றிப் படிந்தது மட்டுமன்றி, வீட்டுக் கூரைகளிலும், குதிரைகளின் முதுகிலும் மக்களின் தோள், தொப்பி என்பனவற்றிலும் மெல்லிய படலமாகப் படியத் தொடங்கியது. வண்டிக்காரனை அயோனா பொடபோஸ் வெண்மையான தோற்றம் உடையவனாய்ப் பேய்போலக் காட்சியளித்தான். அவனுக்கு உடல் சரிபாதியாக மடிந்து கூன் விழுந்து காணப்பட்டது. வண்டியிலே, சாரதியின் கூட்டிலே அவன் அசையாமலே இருந்து கொண்டான். பெரிய பனிப் பெயல் அவன் மீது விழுந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் கவலையின்றி இருப்பவன் போலக் காணப்பட்டான்.

வினா:—

1. அந்திமயங்கும் வேளை என்பது (மாலைப் பொழுதை, பிற்பகலை, இரவும் மாலையும் சந்திக்கின்ற நேரத்தை)க் குறிக்கும்.
2. ஏற்றப்பட்டு என்பதற்கு (இறக்கப்பட்டு, அணைக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு) என்பது எதிர்ச்சொல்லாகும்.
3. சுற்றி என்றால் (வட்டமிட்டு, சூழ்ந்து, வளைந்து) எனப் பொருள்படும்.
4. மெல்லிய என்பதற்கு (தடித்த, புல்லிய, பெருத்த) என்பது எதிர்ச் சொல்லாகும்.
5. பேய்போல என்பது (உருவகம், உவமேயம், உவமை) ஆகும்.
6. காட்சி என்றால் (உருவம், அழகு, தோற்றம்) எனப் பொருள் படும்.

7. மடிந்து என்பதற்கு (நிமிர்ந்து, உயர்ந்து, நீண்டு) என்பது எதிர்ச் சொல்லாகும்.

8. சாரதி என்றால் (பிரயாணி, செலுத்துவோன், இழுப்போன்) ஆகும்.

9. பெயல் என்றால் (புயல், காற்று, மழை) ஆகும்.

10. பொருட்படுத்தாமல் என்றால் (அசட்டை செய்யாமல், சட்டை செய்யாமல், கவனித்துக் கொண்டு) எனப்படும்.

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

11. கத்திப்பிடி (களன்று, கழன்று, கழண்று) வீழ்ந்தது.

12. விவசாயிகளுக்கு (மண்வெட்டி, மம்பட்டி, வண்வெட்டி) மிக அவசியமானது.

13. சுருட்டு (பற்ற வைப்பது, பிடிப்பது, குடிப்பது) தீய செயலாகும்.

14. கட்டுரையைக் கவனமாக (வாசித்தால், படித்தால், பார்த்தால்) மட்டுமே பொருளை கிரகிக்கலாம்.

15. திட்பமான பொருட்கள் (நீருள் அமிழும், ஓடும், செல்லும்) தன்மையுடையன.

16. கருமைக்கு வெண்மைபோல அருமைக்கு (பெருமை, எளிமை, நன்மை).

17. தண்ணீருக்குத் தண்மைபோல வெந்நீருக்கு (வெண்மை, வெம்மை, செம்மை).

18. தேருக்குப் பாகன்போல, கப்பலுக்கு (விமானி, சாரதி, மாலுமி)

19. தென்னைக்கு இளநீர்போல் பனைக்கு (நுங்கு, பனம்பழம், குரும்பை)

20. ஆனைக்குப் பந்திபோல, பல்லுக்கு (வரிசை, தொடர், அடுக்கு)

21. நரி ஊளையிடும்; புலி (உறுமும், சீறும், பிளிறும்)

22. மானின் ஆண் கலை; நண்டின் ஆண் (கடுவன், அலவன், குண்டு)

23. விருத்தனுக்கு விருத்தை போல வாலிபனுக்கு (வாலிபை, வாலை, வாலியை)

24. பத்திரிகையில் எனது முதற் கவிதையைக் கண்டதும் எனக்கு (தூக்கிவாரிப் போட்டது, உச்சி குளிர்ந்தது, தலைகனத்தது)

25. அத்தனை அவமானங்களையும் தாங்கிக் கொண்டு தனது கோபத்தை வெளிக்காட்டாமல், (ஆலையில் அகப்பட்ட கரும்பு போல, ஓடும் புளியம்பழமும் போல, நீறுபூத்த நெருப்புப் போல) பேசாதிருந்தான்.

பின்வருவன ஒவ்வொன்றையும் குறிக்கும் ஒரே சொல் அல்லது ஒரே தொடர் இதனடியில் தரப்படுகின்றன. அவற்றின் முன்னுலுள்ள அடைப்புக் குறிக்குள் அவற்றுக்குப் பொருத்தமான விளக்கத்தின் இலக்கத்தை இடுக.

26. தானே தன்னைப்பற்றி எழுதும் வரலாறு.

27. ஒரே நேரத்தில் நூறு காரியங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன்.

28. எவருக்காவது இல்லையென்னுது வாரி வழங்குபவன்.

29. போருக்குச் சென்றவர்கள் தங்கி இருக்குமிடம்.

30. அறுபதாவது ஆண்டிலே செய்யப்படும் கொண்டாட்டம்.

31. சங்கு போன்ற வடிவம் அமையப் பெற்ற பொன்.

32. பலர் மத்தியில், சொல்லத்தகாத வார்த்தையை மறைத்து வேறு சொல்லாற் சொல்லுதல்.

33. இரு கருத்துக்களைத் தருவதாக அமைந்தது.

34. அரசராலும் செல்வராலும் தத்தமது கீழ்ப்பட்ட ஊழியருக்கு வழங்கப்படும் நிலம்.

35. ஏதாவதொரு நிகழ்ச்சியை அரங்கேற்று முன் அதன் குறை நிறைகளைச் சீர்தூக்கித் திருத்தும் நிகழ்ச்சி.

[ ] வள்ளல் [ ] சிலேடை [ ] சங்கநிதி

[ ] சுயசரிதை [ ] சதாவதானி [ ] நிந்தகம்.

[ ] வைர விழா [ ] இடக்கரடக்கல்

[ ] பாசறை [ ] ஒத்திகை

பின் வரும் வாக்கியங்களிலுள்ள ஆரியச் சொற்கள் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ளன. அச் சொற்களுக்குரிய வட சொற்களை உரிய இலக்கத்தின் நேரே இடுக.

36. உட்கொண்ட ஔஷதம் இன்னும் ஜீரணம் ஆகவில்லை .........

37. இந்த ரிஷி இதில் போஜனம் பண்ணுர் ............ ...............

38. குஷ்டம் பிடித்தவன் கல்யாணம் செய்திலன் ......... .........

39. அதோ, ருக்மணி சேஷ்டை செய்கிருள் ......... .........

40. இது பாஸ்கரன் தந்த புஷ்பம் ......... .........

பின்வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்டுள்ள இடங்களில் வர வேண்டிய குறியீடுகளை உரிய இலக்கத்தின் நேரே இடுக.

மா (41) பலா (42) வாழை என்பன முக்கனிகள் என அழைக்கப் படுகின்றன (43) இவற்றைப் புசிக்க விரும்பாதோர் உளரோ (44) நேற்று இவற்றைச் சந்தைக் கடைகளில் பார்த்தேன் (45) வாங்கி உண்ணவும் விரும்பினேன் (46) இதை நான் அப்பாவிடம் கூறிய போது அவர் (47) (48) நாளை உனக்கு வாங்கித் தருகிறேன் (49) என்முர் (50)

| | | | |
|---|---|---|---|
| 41 ( ) | 44 ( ) | 47 ( ) | (50) ( ) |
| 42 ( ) | 45 ( ) | 48 ( ) | |
| 43 ( ) | 46 ( ) | 49 ( ) | |

பின் வரும் பாடலில் கீறிடப்பட்டுள்ள சொற்களின் பொருளை உரிய இலக்கத்தின் நேரே எழுதுக.

51. காமர் 52. கயல் புரளக் காவி 53. முகை நெகிழத்
தாமரையின் செந்தேன் 54. தளை யவிளப் — பூமடந்தை
தன் 55. நாட்டம் போலும் தகைமைத்தே 56. சாகரம் சூழ்
நன்னுட்டின் முன்னுட்டு நாடு.

51 ............... 55 ............

52 ............... 56 ............

53 ...............

54 ...............

பின் வரும் தனி வாக்கியங்களை ஏற்றவண்ணம் மாற்றியமைத்து ஒரே முற்று வினை கொண்டு முடியத்தக்கதாக எழுதுக.

57. முகுந்தன் எங்கள் வீட்டு வேலைக்காரன்.

58. அவனுக்கு நல்ல சட்டைகளே கிடையாது.

59. அவனிடம் ஓர் அழுக்குக் காற்சட்டை உண்டு.

60. அதை அவன் எப்போதும் அணிந்துகொள்வான்.

61. அதோடு அவன் நீர் சுமந்து வருவான்.

62. அவன் நல்ல பலசாலி

63. அப்போது நான் அவனைப் பார்ப்பேன்.

64. எனக்குப் பரிதாபமாயிருக்கும்.

57 – 64 ................. ................. ........... ...........

........... ........... ........... ............. ..................

........... ........... ........... ............. ..................

........... ........... ........... ............. ..................

பின் வரும் தொடர்களைப் பிரித்தெழுதுக.

65. புற்றருகுற்றனர் ................. .................

66. சிற்சிலாகமங்கள் .............. ..............

67. செப்பேட்டெழுத்து .............. ..............

68. பஃறுளியாறு .............. ..............

சரியான விடையின் கீழ்க் கிறிடுக.

69. "உயிர்மெய்" என்னும் தொடர் (பண்பு, உவமை, உம்மை)த் தொகையின் பாற்படும்.

70. "பூங்குழல் வந்தாள்" என்பதிலுள்ள பூங்குழல் (வேற்றுமை, அன்மொழி, வினை)த் தொகையாகும்.

71. "புத்தகத்தை" என்னும் சொல் (மூன்றும், இரண்டாம், நான்காம்) வேற்றுமை உருபேற்ற பெயராகும்.

72. (கொக்கு, சங்கு, வரகு) என்பது வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு ஓர் உதாரணமாகும்.

73. இரண்டாம் வேற்றுமை (கருவி, கருத்தா, செயப்படு பொருளில்) வரும்.

பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அடியில் வரும் வினைக்களுக்கு விடை தருக.

யான் கிழக்கிலங்கையிலே பிறந்தவன். தேன் பாயும் கருப்பஞ் சோலைகளும், வானளாவும் மரக் காடுகளும், மீன்பாடும் வாவிகளும் நிறைந்த மட்டக்களப்பு மாவட்டத்திலே வாழைச்சேனை என்ற இடமுள்ளது. அங்குள்ள காகிதக் கூட்டுத்தாபன வளவில்தான் பிறந்து வளர்ந்தேன். எங்கள் பெற்றோர் நாட்டிற்கு உண்டி கொடுத்து உயிர்களை வாழவைத்து நெற்கதிர்களாகிய உணவுச் சுமைகளை தாங்கி, உடல் நலிந்து வளைந்து வீழ்ந்த உத்தமர், உழைப்பின் மிகுதியால் உடலினைத் துக் காய்ந்து வைக்கோலானார். இன்னொருவர் ஆலையில் உழன்று சக்கரைச் சாறு பொழிந்து தன்னுடல் சக்கையானவர் உலகிற்கு நிழலாய் நின்றவர், அவர் வாளால் அரியுண்டு தாள் தாளானார்.

கிழக்கிலங்கையிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில்

74. ............... 75. ........... என்பன பலவுண்டு.

76. உடல்நலிந்து வீழ்ந்த உத்தமர் யார்?

77. உலகிற்கு நிழலானவர் என்னவானார்?

78. இவ்வுரைப் பகுதி (வர்ணனை, ஆராய்ச்சி, சுயசரிதை) வகையைச் சேர்ந்தது. (சரியானதன் கீழ்க் கீறிடுக)

79. இதனை யார் பேசுகிறார்?

80. சக்கையானவரின் முதற் பெயரென்ன?

## மாதிரி வினாப்பத்திரம்—4.

# ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை
# தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:– 40 நிமிடம்

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.)

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களோடு தொடர்புடைய வினாக்களும், அடைப்புக் குறிக்குள் அவற்றுக்கான பல விடைகளும் தரப்படுகின்றன. சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது. தீ, வெள்ளம் முதலியவற்றால் நாசமுறாது, பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க வளருமேயன்றிக் குறைவுபடாது. ஆதலின் இது அழியும் தன்மை உடையதன்று. மேலும், பெரும்பாலும் தக்காரிடத்தே உண்டாகி நிலைபெறும். ஒருவனது உடல் அழியினும் அவன் கற்ற கல்வி அழியாமல் அவனுயிரோடு கிடந்து அவ்வுயிர் சென்றவிடத்துச் சென்று உதவும். இதனை ஈட்டலும், காத்தலும் எளிது. இழத்தலே இல்லை. இது பகையையும் நட்பாக்கும்.

1. கவரப்படுதல் என்றால் (இழுக்கப்படுதல், எடுக்கப்படுதல், திருடப்படுதல்) ஆகும்.
2. வெள்ளம் என்பது (நீரை, நெருப்பை, அழிவைக்) குறிக்கிறது.
3. நாசமுறாது என்றால் (பிழைபடாது, குறைவுபடாது, அழிவுறாது) என்பது பொருளாகும்.
4. பிறர் என்பதற்கு (சிலர், தமர், பலர்) என்பது எதிர்ச் சொல்லாகும்.
5. அழியுந்தன்மை என்பதற்கு (ஆகுந்தன்மை, ஆக்குந்தன்மை, ஆக்கப்படும் தன்மை) என்பது எதிர்ச் சொல்லாகும்.
6. பெரும்பாலும் என்றால் (ஏறத்தாழ, கிட்டத்தட்ட, அநேகமாக).
7. நிலைபெறும் என்பது (நிரந்தரம், தற்காலிகம், ஆக்கம்) ஆகும்.

8. ஈட்டல் என்பதன் பொருள் (உணர்தல், அறிதல், சம்பாதித்தல்) ஆகும்.

9. எளிது என்பதற்கு (இனிது, அரிது, பெரிது) என்பது எதிர்ச்சொல்லாகும்.

10. இழத்தல் என்பதன் எதிர்ச்சொல் (ஈட்டல், தொலைத்தல், அளித்தல்) ஆகும்.

பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் தடித்த எழுத்துக்களாலான சொற்கள் ஒவ்வொன்றும் எந்த அடியிலிருந்து பிறந்தன என்பதை அவற்றுக்கு நேரே எழுதுக.

11. அவர்கள் இனிமையாகப் பாடினார்கள் ..........................

12. இங்கு நல்லாட்சி நடைபெறுகிறது ......................

13. சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவராவர் ..........

14. அவர்கள் தொலைதூரம் சென்றார்கள் ..........................

15. அந்தச் சிறுவன் எங்கே? ..........................

16. செங்கமலம் நன்றாய்ச் சிரி ..........................

17. இறைவன் ஒரு நாள் வருவான் ......................

18. நிம்மதியாகத் துயின்றனர் ..........................

19. குகன் பரதனைக் கண்டான் ..........................

20. உள்ளம் மரத்து விட்டது ......................

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

21. தவறான வழியிற் செல்வோர் (தாழ்ச்சி, தாட்சி, தாழ்சி) அடைவர்.

22. அது எனக்கு (இஷ்டம், இஸ்ரம், இஷ்ட்டம்) இல்லாத செயல்.

23. இதன் விலை (பன்ரெண்டு, பனிரெண்டு, பன்னிரண்டு) சதமாகும்.

24. அதன் சுற்றளவு, நான்கு (மையில்கள், மயில்கள், மைல்கள்) இருக்கும்.

25. தலைக்குத் தேய்க்க (எண்ணெய், எண்ணை, எண்ணய்) போதாது.

26. பால் (சாப்பிட்டாயா? உண்டாயா? பருகினாயா?)

27. பாய் (பீந்து, பிய்ந்து, பிய்ஞ்சு) போயிற்று.

28. வயலும், வயல் சார்ந்த இடமும் (குறிஞ்சி, நெய்தல், மருதம்) எனப்படும்.

29. வெண்பாவில் புகழேந்தி; வசைபாடக் (கம்பன், காளிதாசன், காளமேகம்)

30. கம்பருக்கு (குலோத்துங்கன், விஜயன், அம்பிகாபதி) என்றொரு புதல்வன் இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

31. ஒவ்வொரு சிறுவனும் எவ்வேழு வடை (சாப்பிட்டார்கள், சாப்பிட்டனர், சாப்பிட்டான்).

32. நாங்கள் (தத்தம், எமது, தமது) கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

33. நான் சுகமாயிருப்பதாக அப்பாவுக்குக் (காகிதம், கடிதம், கடுதாசி) வரைந்தேன்.

34. எழுவாய் எப்போதும் (முதலாம், ஐந்தாம், ஏழாம்) வேற்றுமையாகத்தான் வரும்.

35. தெளிவாகக் காலத்தை உணர்த்துவது (குறிப்பு, தெரிநிலை, வியங்கோள்) வினையாகும்.

36. ஒரு நெட்டெழுத்து அல்லது ஒற்றெழுத்து தன் மாத்திரையில் மிக்கொலித்தல் (குறுக்கம், அளபெடை, குற்றியலுகரம்) எனப்படும்.

37. அந்த நாட்டியராணியின் சதங்கைகள், (கலீர்கலீர், கிண்கிண், டாண்டாண்) என ஒலித்தன.

38. தன்மகன் இறந்து விட்டான் என்ற சேதியைக் கேள்வியுற்ற தாய், (கையறுந்தாள், தலைமுழுகினாள், சாவுமணி அடித்தாள்).

39. தந்தையை இழந்துவிட்ட கந்தையா தனது குடும்பத்திற்குத் தானே (கோடரிக்காம்பாய், அச்சாணியாய், கோபுரந்தாங்கியாய்) இருந்து பாதுகாத்து வந்தான்.

40. நண்பர் இருவரும் (கீரியும் பாம்பும்போல, கிளியும் பருந்தும்போல, நகமும் சதையும்போல) அன்புடன் பழகினர்.

பின்வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்டுள்ள சொற்களைச் சந்தி சேர்த்து எழுதுக. சந்தி சேர்க்கப்பட்ட புதிய வடிவத்தை உரிய இலக்கத்தின் நேரே தருக.

இறைவனை (41) அனுதினமும் (42) ஏத்தி வணங்காதார், அவனது பாத (43) அரவிந்தங்களைப்பணிய (44) எண்ணுதார் (45) எஞ்ஞான் றும் அவனருள் பெறல் (46) அரிதாம். இறைவன் (47) இடம் (48) இருந்து பெறல் (49) பாலது (50) ஆன நல் (51) கருணையை (52) அடைய முயல்வோமாக.

41. ................... 46. ................... 51. ..............

42. ................... 47. ................... 52. ..............

43. ................... 48. ...................

44. ................... 49. ...................

45. ................... 50. ...................

பின்வரும் வாக்கியங்களில் கிறிடப்பட்டுள்ள சொற்களின் பொருளை எழுதுக.

53. இராமன் சென்னி மண்ணுற வணங்கினன் ....................

54. அம்பு மருமத்தை துளைத்துச் சென்றது ..................

55. பாண்டவர் ஐவரும் அடவி எய்தினர் ...........................

56. பசியும், பிணியும் பருவரல் செய்தன ....................

57. பட்டாங்கில் உள்ளபடி ..........................

பின்வரும் தனிவாக்கியங்களை ஏற்ற வண்ணம் மாற்றி அமைத்து ஒரே முற்றுவினை கொண்டு முடியத்தக்கதாய் எழுதுக.

58. ஆசிரியர் சுகுமாரனை அழைத்தார்.

59. அவன் பயத்துடன் அவர் அருகிற் சென்றான்.

60. சுகுமாரன் முதல் நாள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

61. முதல் நாள் அவன் நோய் வாய்ப்பட்டிருந்தான்.

62. அவன் பாடசாலைக்கு வராத காரணத்தை ஆசிரியர் வினவி னர்.

63. சுகுமாரன் தனக்கிருந்த வருத்தத்தைச் சொன்னான்.

64. ஆசிரியர் அவன் சொன்னதை நம்பவில்லை.

65. ஆசிரியர் அவனை அடித்து விட்டார்.

66. இது சுகுமாருக்கு வேதனையைத் தந்தது.

58 – 66. ........... ........... ........... ........... ...........

........... ........... ........... ........... ...........

........... ........... ........... ........... ...........

........... ........... ........... ........... ...........

........... ........... ........... ........... ...........

பின்வரும் உரைப் பகுதியைப் படித்துக் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடை தருக.

சுமார் நாற்பத்தைந்து வயதுள்ளவர். நல்லெண்ணெய்க் கறுவல். நீண்ட மீசையுடையவர். கடைசியாகக் காணப்பட்டபோது கறுப்புக் கரை போட்ட நாலுமுழ வேட்டி உடுத்திருந்தார். வலக்கண், இமைக் குக் கீழே காயத் தழும்பு உண்டு. பார்வையில் ஒரு வகையான வாக் குண்டு. குதிக்கால் நிலத்திலே படாமல் நடப்பவர். ஆரம்பத்திற் கொன்னையாகவே பேசுவார். மேல் வாய்ப் பல்லொன்று தங்கத்தினுற் கட்டப்பட்டிருக்கும். சாதாரணமாகப் பெனியன் போட்டுக் கொள் வார். எப்பொழுதும் வாயிற் புகையிலை போட்டுக் குதப்பிக் கொண்டி ருப்பார்.

இப் பந்தியிற் குறிப்பிடப்படுபவர் (67) ........... மீசையையும்,

(68) .............. மேனியையும் உடையவர்.

69. இரு கண் பார்வையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருப் பதை எவ்வாறு அழைக்கலாம்? ......................

70. இவரது ஆரம்பப் பேச்சு எப்படி இருக்கும்? ..................

71. இவரது நிறத்துக்கு உவமையாக வந்ததென்ன? ..............

72. இப்பந்தி (வருணனை, ஆராய்ச்சி, கற்பனை) வகையைச் சேர்ந்தது.

(சரியான விடையின் கீழ்க் கீறிடுக.)

73. இவர் எப்பொழுதும் தனது வாய்க்குக் கொடுக்கும் வேலை என்ன?

74. இப் பகுதியில் குறிப்பிடப்படும் உலோகம் யாது?
சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

75. கழுத்திற் கட்டுதல் என்றால் (அவமானப்படுத்தல், பொறுப்பை நீக்கிக் கொள்ளுதல், வற்புறுத்திப் பொறுப்பாளியாக்கல்.)

76. கொடுக்குக் கட்டுதல் என்றால் (முனைந்து நிற்றல், சண்டைக்கு ஆயத்தமாதல், மதிப்பின்றி நடத்தல்.)

77. ஏட்டுச்சுரக்காய் என்பது (பயன்படாத கல்வி, சுவையற்றது, உண்ண முடியாதது.)

78. மட்டை அடித்தல் என்றால் (முயற்சி செய்தல், வேலையில்லாமல் அலைந்து திரிதல், கஷ்டப்படுதல்.)

79. கண்ணோடுதல் (இரங்குதல், கண்ணுற் பார்த்தல், அங்குமிங்கும் பார்த்தல்.)

80. உப்பில்லாப் பேச்சு என்பது (குழந்தைப் பேச்சு, பயனற்ற பேச்சு, நம்பமுடியாத பேச்சு).

## மாதிரி விஞப்பத்திரம்—5.

### ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை

### தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:– 40 நிமிடம்

(எல்லா விஞக்களுக்கும் இவ்விஞத் தாளிலேயே விடை தருக)

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்டனவற்ருேடு தொடர்புடைய விஞக்களும் அடைப்புக் குறிகுள்ளும் அவற்றுக்கான பல விடைகளும் தரப்பட்டுள்ளன. அதன் கீழ்க் கீறிடுக.

சிகிரியாவிற் காணப்படும் குகை ஓவியங்கள் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் சென்ற பின்னும் வண்ணம் மாருமல் விளங்குகின்றன. அந்த ஓவியங்களுள்ளே எழில் நிறைந்த மங்கையரின் உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. மலரேந்திய கையினராய் அம்மங்கை நல்லார் சிலர் வருகின்றனர். வண்ண மலர்த் தட்டேந்திய வண்ணம் பணிப் பெண் தன் முன்னே செல்லப் பின் செல்பவள் பேரழகு பொருந்திய ஒரு பொற் கொடியாவாள். இந்த எழிலோவியங்கள் எல்லாம் காலத்தைக் கடந்து கற்பாறையிலே வாழுகின்றன என்பதை எண்ணி மகிழ வேண்டும்.

விஞ:—

1. ஓவியங்கள் என்ருல் (சித்திரங்கள், சிற்பங்கள், சிலேகள்) ஆகும்.
2. வண்ணம் என்பதன் பொருள் (நிறம், அமைப்பு, அழகு) ஆகும்.
3. விளங்குகின்றன என்பதற்கு (துலங்குகின்றன, மங்குகின்றன இலங்குகின்றன) என்பது எதிர்ச் சொல்லாகும்.
4. எழில் என்ருல் (செல்வம், மேன்மை, அழகு) எனப் பொருள் படும்.
5. தீட்டப்பட்டுள்ளன என்ருல் (வரையப்பட்டுள்ளன, செதுக்கப் பட்டுள்ளன செய்யப்பட்டுள்ளன)
6. வண்ண மலர் என்பது (விஃன, பண்பு, உவமை)த் தொகை.
7. பணிப் பெண் (உயரம் குறைந்த, சமையல் செய்கின்ற, ஏவல் செய்கின்ற) பெண்ணுவாள்.
8. "பேரழகு" என்னும் தொடர் (பேர், பெயர், பெருமை) என்னும் பண்படியாகப் பிறந்தது.

9. பொற்கொடி (அன் மொழி, வேற்றுமை, உம்மை)த் தொகை.

10. காலத்தைக் கடந்து என்னும் தொடர் (நிலைத்து, உயிரோடு, அழகோடு) என்னும் பொருளைத் தருகிறது.

கீழ்வரும் இணை மொழிகளில் ஏற்றவற்றைத் தெரிந்து இடைவெளி நிரப்புக.

பேரும் புகழும், கூடிக் குலவி, ஆற அமர, சந்து பொந்து, நீட்டி நிமிர்ந்து, மறைக்கவோ மறுக்கவோ, பின்னிப் பிணைந்து, கள்ளங் கபடம், கல்வி கேள்வி, பட்டம் பதவி.

11. பலர் முன்னிலையில் நடந்த இச்சம்பவத்தை எவரும் ... ... ... ... ... ... ......... ... ... ... ... .................... முடியாது.

12- ... ... ... ... எதுவும் அறியாத சிறுவர்களைச் சிலர் தவறான வழியில் செலுத்துகின்றனர்.

13. விருந்தோம்பல் என்னும் பண்பு தமிழர் தம் வாழ்வில் — ...... ... ... ...........................காணப்படுகிறது.

14. வீடு தீப்பற்றி விட்ட சேதி கிராமத்தின் ... ...... ............... களிலெல்லாம் பரவியது.

15. ...... ... ... ...... படுக்க முடியாதவாறு கால் வீங்கியது.

16. நந்தி வர்மன் தன் இளமைப் பருவத்திலேயே ... ............... ... ... ...... ... .........................களிற் சிறந்து விளங்கினன்.

17. எங்கள் தொகுதிப் பிரதிநிதி ............களில் ஆசையற்றவர்.

18. அருச்சுனன் வில்வித்தையில் ............ பெற்று விளங்கினன்.

19. பன்னெடு நாட்களாய்க் ..............அற்றுப் பழகிய நண்பன் இன்று பகைத்துக் கொண்டான்.

20. எந்த ஒரு காரியத்தையும்............ச் சிந்தித்து செயலாற்றும் தன்மையே சிறந்தது.

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

21. எங்கள் கிராமம் (பிரையாண, பிரய்யாண, பிரயாண) வசதி களில் மிகவும் பின்தங்கியுள்ளது.

22. இராவணன் சீதையை ஆகாய (மாற்கமாக, மார்கமாக, மார்க்கமா)க் கவர்ந்து சென்றான்.

23. வயிற்று வலிக்குக் கொஞ்சம் (சுடுநீர், சுடுதண்ணி, சுடு தண்ணீர்) குடித்தால் சற்று ஆறுதலாய் இருக்கும்.

24. வேடன் பற்றை மறைவில் (ஒளிர்ந்து, ஒளிந்து, ஒழிந்து) கொண்டான்.

25. ஆத்திரம் கொண்ட அப்துல்லா தன் நண்பனுக்குக் கடுமை யாக (ஏசினன், கதைத்தான், பேசினன்)

26. ஒவ்வொருவருக்கும்(எட்டெட்டு, எண்ணெட்டு, எவ்வெட்டு)ப் பழங்கள் கிடைத்தன.

27. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி எடுக்கப் படும் விழா (வைரவிழா, வெள்ளிவிழா, பொன்விழா)

28. பத்துப் பாடல்கள் கொண்டது (பதிகம், சதகம், பரணி) ஆகும்.

29. கட்டளை மீறித் தன் இஷ்டம் போல் நடந்து கொள்ளும் ஓர் இளைஞன் (தபுதாரன், சிறுபட்டி, நைட்டிகன்) எனப்படுவான்.

30. கம்பராமாயணம் (வெண்பாக்களால், விருத்தங்களால், அகவல்களால்) ஆன காவிய நூலாகும்.

31. "மணிப்புரி நன்று; மகளிருக் கேற்றது" என்னும் வாக்கியத்தில் (மகளிர், மணிப்புரி, நன்று) என்பது ஆகு பெயர்.

32. நீதிக்கு அநீதி போல விசாரத்திற்கு (அவிசாரம், அவவிசாரம் நிர்விசாரம்)

33. கோபாலனை நான் ஏமாற்றிய படியால் அவனோடு (முகங் கொடுத்து, பொடிவைத்து, தோள் கொடுத்து)ப் பேச முடிய வில்லை.

34. மடமைக்குப் புலமைபோல, மருட்சிக்கு (அருட்சி, தெருட்சி, மிரட்சி)

35. இன்று நம் மத்தியிலே ஆற்றல் மிக்க கவிஞர்கள் பலர் எவருக் கும் தெரியாமல்( இலைமறைகாய்போல, ஊமை கண்ட கனவு போல, சுடச்சுடரும் பொன்னைப் போல) வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள்.

பின் வரும் ஒவ்வொன்றுக்கும் பல உதாரணங்கள் அடைப்புக் குறிக் குள் தரப்பட்டுள்ளன. சரியான உதாரணத்தின் கீழ்க் கீறிடுக.

36. உரிச் சொல் (உம், ஏ, உறு)

37. தொழிற் பெயர் (ஆசிரியர், சமைப்பவன், சமைத்தல்)

38. உயிரளபெடை (தழீஇய, இலங்கு, இலங்ங்கு)

39. குற்றியலுகரம் (தேக்கு, அளவு, அது)

40. வினைத் தொகை (அடிகல், அடிக்கல், கடற்கரை)

41. பெயரெச்சம் (வந்த, வந்து, வந்தார்)

42. வினையாலணையும் பெயர் (நடப்பவன், நடத்தல், நடந்து)

43. காரணப் பெயர் (மரம், மேசை, மரம் கொத்தி)

44. பண்புத் தொகை (நீலக்கடல், சுடுசோறு, வாய்வயிறு)

45. மூன்றும் வேற்றுமை உருபேற்ற சொல் (மகனை, மகனுக்கு, மகனால்)

பின் வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்டுள்ள இடங்களில் வர வேண்டிய குறியீடுகளை, உரிய இலக்கத்தின் நேரே எழுதுக.

மன்னவன் அதனைக் கேட்டான் (46) மயங்கினான் (47) பின்னர் தெளிந்தான் (48) தனக்கு எதிரே நின்றிருந்த மந்திரியாரை அவன் நோக்கி (49) (50)அமைச்சரே (51) உண்மையில் இறந்து விட்டனவா (52) இதை என்றால் நம்பமுடியவில்லையே (53) (54) என்று வியப் போடு நோக்கினான் (55).

46. ( ) 47 ( ) 48 ( ) 49 ( ) 50 ( ) 51 ( ) 52 ( )
53 ( ) 54 ( ) 55 ( )

ஒழுங்கான வாக்கியத்தின் நேரே √ என்ற அடையாளமிடுக.

56. (அ) முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட அரசனின் நாடு எதிரிகளால் முற்றுகையிடப்பட்டது. ... ... ......

(ஆ) அரசனது முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட நாடு எதிரிகளால் முற்றுகையிடப்பட்டது. ... ......

57. (அ) பெண் பிள்ளைகள் தங்குவதற்குப் பிரத்தியேக வசதிகள் உண்டு ... ... ... ...

(ஆ) பெண்கள் தங்குவதற்குப் பிரத்தியேக வசதிகள் உள்ளன. .....................

58. (அ) நீ சொல்வது சரியல்ல ... ... ......

(ஆ) நீ சொல்வது சரியன்று ... ...... ...

59. (அ) உங்கள் கடிகாரத்தில் மணி என்ன? ... ......

(ஆ) உங்கள் கடிகாரத்தில் நேரமென்ன? ... ... ......

60. (அ) கூட்டத்தை இத்தோடு முடித்துக் கொண்டு நாளை தொடர்வோம் ... ... ...

(ஆ) இத்தோடு கூட்டத்தை நாளை வரை ஒத்தி வைப்போம்...

61. (அ) சங்கரன் கணித வினுக்களைச் செய்து கொண்டிருந்தான்...

(ஆ) சங்கரன் கணித வினுக்களை விடுவித்துக் கொண்டிருந் தான்...............

பின் வரும் வாக்கியங்களிற் கீறிடப்பட்டுள்ளசொற்களுக்கான பொருளை நேரே எழுதுக.

62. மன்னும் இமயமலை எங்கள் மலையே ... ... .........

63. திருவிழா கால்கோள் ஆயிற்று ... .........

64. இலம்பாடு நாணுத் தரும் ... ... .........

65. நல்லன சொல்லியும் புல்லியர் கேளார் ... ... ... ......

66. உலகைக் காப்பது காராளர் கை ...... ... ...

67. மெல் அமளியிசைத் துயின்றனர்...........

68. சாதிப் பாகுபாடு இன்னும் நிலவுகிறது ... ... ... ...

பின்வரும் உரைப் பகுதியைப் படித்துக் கீழே தரப்பட்ட வினுக் களுக்கு விடை தருக.

"சதா அச்சத்துடனே வாழ்பவர்கள் அடிக்கடி, நாளுக்கு நாள் இறந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல மரணங்களின் வேத னையை அனுபவிக்கிறார்கள். ஆனால், அஞ்சாத நெஞ்சம் படைத்த ஆடவனுக்கு வருவது ஒரே மரணந்தான். அவன் ஒரே முறைதான் இறக்கிறான். பெண்ணே, துன்பமும் நானும் இருசகோதரர்கள்; இரு வரும் ஒரே வேளையில்தான் பிறந்தோம். என் சகோதரனைக் கண்டு நான் பயப்படுவேனா? மரணம் வந்தால் வரட்டும்! என்னை விடு! நான் அரசவைக்குப் போய்த்தான் ஆக வேண்டும்!" என்று அவசரப் பட்டார் யூலியஸ் சீசர்.

வினு:—

அஞ்சினர்க்குச் சதா 69 ...................... அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு 70 ...... ... ...... ...மரணம்.

71. "சதா" என்பது (காலத்தை, இடத்தை, குணத்தை) உணர்த்து கிறது.

72. யூலியஸ் சீசரின் சகோதரன் யார்?

73. அவர் குறிப்பிடும் இருவகையாளருள்ளும் சீசர் எவ்வகையைச் சேர்ந்தவர்.

74. சீசர் சதா இறந்து கொண்டிருக்கிறார் என்பது பொருந்துமா? ஆம்/ இல்லை. (பிழையான விடையை வெட்டுக)

75. இவ்வுரைப் பகுதியில் (வீர, சோக, அங்கத) உணர்வு காணப்படுகிறது.

பின் வருவனவற்றுக்குப் பொருத்தமான மரபு மொழியின் கீழ்க் கீறிடுக.

76. வற்புறுத்திக் கூறுதல் (இளநாக்கடித்தல், இடித்துரைத்தல், இரட்டுற மொழிதல்)

77. ஒவ்வொன்றாய் விளக்கிச் சொல்லுதல் (பிட்டுக் காட்டல், நாக்கு நீளுதல், திறந்து பேசுதல்)

78. விடாப் பிடியாய் இருத்தல் (கச்சைகட்டுதல், கங்கணம் கட்டுதல், ஒற்றைக் காலில் நிற்றல்)

79. ஒருவருக்குக் கேடு செய்தல் (கையைக் கடித்தல், கொள்ளி சொருகுதல், ஒருகை பார்த்தல்)

80. அதிகம் செலவிடுதல் (அள்ளிக்குவித்தல், கைமிகுதல், அள்ளியிறைத்தல்)

## மாதிரி வினைப்பத்திரம்—6.

### ஜீ. ஸீ. ஈ.சாதா. பரீட்சை

### தமிழ் மொழி பகுதி—I.

*நேரம்:— 40 நிமிடம்.*

*(இவ்வினைத் தாளிலேயே விடை தருக)*

*பின்வரும் உரைப் பகுதியிற் கீறிடப்பட்டனவற்றோடு தொடர்புடைய வினைக்களும், அவற்றுக்கான பல விடைகள் அடைப்புக் குறிக்குள்ளும் தரப்பட்டுள்ளன. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.*

பல்லாண்டுகளுக்கு முன் ஒரு பெரிய நகரத்தில் இருந்த அரசன் ஒருவன் அறநெறி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தான். அவன் தன் குடிகளுடைய குறைகளை நேரில் அறிந்து அவற்றை நீக்கும் இயல்பினன். தன் நகரத்திலுள்ள பல இடங்களுக்கும் நாட்டிலுள்ள பிற ஊர்களுக்கும் அடிக்கடி சென்று, குடிகளுடைய சேமலாபத்தை விசாரித்துப் பின்னும் அவர்களுடைய நல்வாழ்வுக்குரிய காரியங்களை இயற்றி வந்தான். அறிவிற் சிறந்த அமைச்சர்கள் அவனுடைய கண்களைப்போல் இருந்து உதவி செய்து வந்தார்கள்.

*வினைக்கள்:–*

1. அரசன் என்னும் சொல் வாக்கியத்தின் (எழுவாயாக, பயனிலையாக, செயப்படு பொருளாக) வருகிறது.
2. அறநெறி என்பது (கடவுள் பக்தியை, நல்லறிவை, நடுநிலைமையை)க் குறிக்கிறது.
3. செங்கோல்=(செ+கோல், செம்+கோல், செம்மை+கோல்)
4. குறை என்பது (போதாமையை, அலுப்பை, கஷ்டத்தை)க் குறிக்கிறது.
5. நேரில் என்பதற்கு (எதிரில், அருகில், மறைவில்) என்பது எதிர்ப்பதமாகும்.
6. அடிக்கடி என்றால் (தொடர்ந்து, வேண்டும்போது, அபூர்வமாக) எனப் பொருள்படும்.
7. சேமலாபம் என்பது (துன்பதுயர், சுகாசுகம், குறைநிறை) எனப் பொருள்படும்.

8. சிறந்த என்பது (தெரிநிலைவினையெச்சம், முற்றுவினை, பெயரெச்சம்)

9. நல்வாழ்வு என்பது (பண்பு, வினை, வேற்றுமை)த் தொகையாகும்.

10. போல் என்பது (சாரியை, வேற்றுமைஉருபு, உவமை உருபு)

பின்வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்ட இடங்களில் வர வேண்டிய குறியீடுகளை அவ்வவ் இலக்கத்திற்கு நேரே இடுக.

(11) நான் செய்தது பெரிய தவறு (12) என்றார் பிரமா (13) (14) பிதாமகரே (15) இந்தப் பரிதாபத்துக்கு நான் என் செய்வேன் (16) தேவலோகத்திலேயே புல்வெளியுண்டல்லவா (17) இதை உங்கேயே அனுப்பி வைக்கிறேன் (18) என்றான் மனிதன் (19) பெரிய அனுதாபத்தையுடையவன் போலப் பாவனை செய்து கொண்டே (20)

(11) (12) (13) (14) (15) (16) (17) (18) (19) (20)

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

21. இந்தத் (துருவிலை, திருவிலை, துருவுபலகை) என்ன விலை?

22. (செய்நன்றி, செய்ந்நன்றி, செய்னன்றி) மறத்தல் கூடாது.

23. அவனிடம் (நாநூறு, நான்னூறு, நானூறு) ரூபா இருக்கிறது.

24. (வென்னீர், வெந்நீர், வென்நீர்) குடித்தேன்.

25. (தற்பெருமை, தற்ப்பெருமை, தர்ப்பெருமை) கூடாது.

26. (அருவாமனை, அரிவாமனை, அரிவாள்மணை) உடைந்து போயிற்று.

27. குளிர்காற்று (சில்லென்று, பட்டென்று, சிலீரென்று) வீசிற்று.

28. அவள் (கலீரென்று, பளீரென்று, சரீரென்று) சிரித்தாள்.

29. அந்த மரம் (கணீரென்று, படீரென்று, தடாலென்று) விழுந்தது.

30. அவன் (விறுவிறு, பரபர, படபட) என்று வேகமாக நடந்தான்.

31. இரத்தம் (கிறுகிறு, குபீர்குபீர், கபகப) என்று வெளியேறியது.

32. நான் தொடங்கிய செயலைத் (தட்டுமுட்டு, தட்டுத்தடுமாறி, தட்டுத்தடங்கல்) இல்லாமல் செய்து முடித்தேன்.

33. நாம் முன்னேற வேண்டுமானால் (ஒய்வொழிவு, கண்ணும் கருத்தும், கண்கடை) இன்றிப் பாடுபட வேண்டும்.

34. இரட்டையர் (அருமைபெருமை, ஈடிணை, ஆதியந்தம்) அற்ற புலவராவர்.

35. நளனைப் பிரிந்த தமயந்தி (உடுக்கை இழந்தவன் கைபோல, இணைபிரிந்த அன்றில்போல, ஆடி ஒய்ந்த பம்பரம் போல) கானெலாம் அலைந்தாள்.

36. பல நாட்களின் பின் நான் அவனைக் கண்டது (கரடி பிறை கண்டதுபோல, சூரியனைக் கண்ட தாமரை போல, ஒளி யைக் கண்ட இருள்போல) இருந்தது.

37. ஆசிரியர் கற்பித்த அனைத்தும் மாணவரது நெஞ்சங்களில் (பசுமரத்தாணிபோல, நீர்க்குமிழி போல, நீர்மேல் எழுத் துப் போல) பதிந்தது.

38. ஒவ்வொருவரும் தத்தமது கடமையில் (கண்ணுயிருத்தல், கண் போடுதல், தாழ்ந்து கொடுத்தல்) வேண்டும்.

39. பாரதப் போரில் அருச்சுனன் தனது (கைவரிசையை, வாய்க் கொழுப்பை, கையடக்கத்தை)க் காட்டினன்.

40. தனது முன்னோரின் சொத்துக்களுக்கு வாரிசாக, வரதன் (பண்பட்டவன், கையாலாகாதவன், கொடுத்து வைத்தவன்)

41. "சுடுசோறு" என்பது (வினை, பண்பு, உவமை)த் தொகை.

42. "நிலங்கடந்தான்" என்பது (ஆறும், மூன்றும், இரண்டாம்) வேற்றுமைத் தொகையாகும்.

43. "மையல்" என்பது (முதல், இடை, கடை)ப் போலியாகும்.

44. "நாகு" என்பது (ஆய்தத்தொடர், நெடிற்றொடர், உயிர்த் தொடர்)க் குற்றியலுகரத்திற்கோர் உதாரணமாகும்.

45. "நின்று" என்பது (எதிர், நிகழ், இறந்த) கால வினையெச்ச மாகும்.

பின்வரும் உரைப் பகுதியிலுள்ள சொற்களைச் சந்தி சேர்த்து எழுதுக. சந்தி சேர்க்கப்பட்ட புதிய வடிவத்தை அவ்வவ் இலக்கத்திற்கு நேரே தருக.

வடக்கு (46) மொழிக் கலப்பினாலே தனி (47) தமிழினுடைய ஒலித்தன்மை நெகிழ்ச்சி (48) உற்றது. தமிழ் மொழியின் (49) ஒலி வேறு (50)மொழியோடு நன்கு (51) இயைந்து செல்ல முயன்று தானும் (52) சிறிது வேறுபட்டு, இரண்டும் நெருங்கி இழைந்து (53) ஒன்றுபட்டன.

(46) ............... (49) ............... (52) ...............

(47) ............... (50) ............... (53) ...............

(48) ............... (51) ...............

பின்வரும் உரைப்பகுதியிற் கீறிடப்பட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொல்லை அவ்வவற்றிற்குரிய கோட்டில் எழுதுக.

அலைந்து திரிந்த அரசன் (54) ஈற்றிலே (55) செய்மையில் ஒரு மிருகத்தைக் கண்டு (56) களிகொண்டான். அஃது ஒரு (57) குன்று போலத் தென்பட்டது. அஃது ஓர் யானை. அதன் (58) மருங்கே ஒரு விலங்கு பாய்ந்தது. அதனை (59) வேங்கை என்றே (60) துணிந்தான். (61) சரம் கதுமெனப் பாய்ந்தது. ஒரு (62) கணப்பொழுதில் வேங்கை திடுமெனக் கீழே விழுந்தது. (63) பரிவாரத்தினர் கூக்குரலிட்டனர்.

(54) ............ (55) ............ (56) ............ (57) ............

(58) ............ (59) ............ (60) ............ (61) ............

(62) ............ (63) ............

பின்வரும் பதங்களைப் புணர்த்தி எழுதுக.

(64) கருமை+குழல்+அழகி ..................

(65) பூ+இயல்+அறிஞர் ..................

(66) ஒரு+ஒரு+மாடு ..................

(67) ஒரு+ஒரு+ஆடு ..................

(68) கற்று+அறிந்து+ஒழுகுக ..................

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" யெனவும் பிழையாயின் "பிழை"யெனவும் அவ்வவற்றின் நேரே எழுதுக.

(69) எழுவாய்க்கு வேற்றுமையுருபு கிடையாது ....................

(70) ஐந்தாம் வேற்றுமை "இல்" உருபும் 7ம் வேற்றுமை "இல்" உருபும் ஒரே பொருளையுடையன ......................

(71) "சாத்தனதுகை" ஒரு தொகை நிலைத்தொடராகும்.........

(72) கொடுந்தமிழ் வழக்கு, கொச்சை வழக்கு என்பன ஒரே பொருளையுடையன....................

(73) தெரிநிலைவினை காலத்தை வெளிப்படையாகக் காட்டும்......

(74) நிலம், நீர், மரம் என்பன பகுபதங்களாகும் .................

(75) "இரவு பகல்" என்னும் தொடர் உம்மைத் தொகையாகும் ....................

சரியான விடையின் கீழ் கீறிடுக.

(76) தட்டிக் கொடுத்தல் என்றால் (உற்சாகப்படுத்தல், சாக்குப் போக்குச் சொல்லுதல், முதுகைத் தடவுதல்)

(77) பம்பரமாட்டுதல் என்றால் (சுழற்றுதல், அலைக்கழித்தல், சொன்னபடியெல்லாம் செய்தல்)

(78) கையாலாகாதவன் என்றால் (கைமுடமானவன், ஒருவருக்கும் கொடாதவன், எதையும் செய்யத் திறமையற்றவன்)

(79) உச்சிகுளிர்தல் என்றால் (மகிழ்ச்சியடைதல், தலையை நனைத்தல், நீரில் மூழ்குதல்)

(80) பச்சையாய்ப் பேசுதல் என்றால் (ஒளிவுமறைவின்றிப் பேசுதல், பொய்யுரைத்தல், கற்பித்துக் கூறுதல்)

## மாதிரி வினப்பத்திரம்—7.
## ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை
## தமிழ் மொழி பகுதி—I.

*நேரம்:— 40 நிமிடம்*

*(எல்லா வினக்களுக்கும் இவ்வினத்தாளிலேயே விடை தருக)*

*பின்வரும் உரைப்பகுதியிலுள்ள தடித்த எழுத்துக்களாலான சொற்களுக்குரிய விளக்கமான பொருள் இதனடியில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு விளக்கத்திற்குமெதிரே உரிய சொல்லே எழுதுக.*

ஆண்டுதோறும் தனக்குச் செலுத்தப்பட வேண்டிய கப்பம் இது வரை வந்து சேராத காரணத்தால் வெகுண்டெழுந்த சக்கரவர்த்தி குறுநில மன்னனைப் போருக்கு அறைகூவி நின்முன். குறுநில மன்னனே இவ்வேளை தன் அரசியின் அந்தப்புரத்திலே அறிதுயில் செய்து கொண்டிருந்தான். போர் முரசு கேட்டது; தாயகம் காத்தல் தலையாய கடன் எனவுணர்ந்த குறுநில மன்னன் சரணகதியை விரும்பவில்லை. சதுரங்கசேனைகளையும் அணிவகுக்குமாறு ஆணையிட்டான். அவ்வேளை கூகை கூவியது. உற்பாதம் அமங்கலமானபோதும் அம் மன்னன் தன் நாட்டு மக்களைப் புறந்தரும் நோக்குடன் போருக்குப் புறப்பட்டு விட்டான்.

*வினக்கள்:—*

1. அரசியர் தங்கி வாழுமிடம் ..................
2. குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை முதலியன ..................
3. சொந்த நாடு ..................
4. பிழையை ஏற்றுக் கொண்டு தஞ்சமடைதல் ..................
5. பாதுகாத்தல் ..................
6. சிற்றரசரால் செலுத்தப்படும் திறைப் பணம் ..................
7. ஆரம்ப அறிகுறி ..................
8. வெளியில் நடப்பதையும் ஓரளவு அறிந்து கொள்ளக்கூடிய நிலையிலான நித்திரை ..................
9. அரசர்க்கரசன் ..................
10. போருக்கு அழைத்தல் ..................

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

11. அகதிகள் என்போர் (தாய் தந்தை அற்ருேர், இடம் பெயர்ந்து வந்தோர், உதவி அற்றவர்)

12. இறும்பூதளிக்கும் என்ருல் (திருத்தி கொடுக்கும், ஆசை தரும், அதிசயம் உண்டாக்கும்)

13. "நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது." என்பதில் நொதுமலாளர் (நடுநிலையாளர், நண்பர், பகைவர்) எனப் பொருள்படும்.

14. புராதனம் என்ற சொல்லின் எதிர்ச்சொல் (பழைமை, நவீனம், பெருமை)

15. திண்மை என்ற சொல்லின் எதிர்ச்சொல் (நொய்ம்மை, உண்மை, பொய்மை)

16. ஒருவன் என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல் (ஒருத்தி, ஒருவி, ஒருவள்)

17. ஆயன் என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல் (ஆயத்தி, ஆயள், ஆய்ச்சி)

18. உழவன் என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல் (உழத்தி, உழவி, உழச்சி)

19. யானைகள் கட்டுமிடம் (பட்டி, பண்ணை, பந்தி)

20. சிங்கத்தின் இளையது (குருளை, கன்று, குஞ்சு)

21. "கண்டது கற்கப் பண்டிதனுவான்." என்பதில் "கண்டது" என்னும் சொல் (காலங்காட்டிய தொழிற்பெயர், தெரிநிலை வினையாலணையும் பெயர், குறிப்பு வினைமுற்று)

22. "கரியமனிதன்" என்பதிற் "கரிய" என்னும் சொல் (ஆறும் வேற்றுமை உருபேற்ற சொல், குறிப்பு வினைப்பெயரெச்சம், குறிப்பு வினையாலணையும் பெயர்)

23. "நுனிநா" என்பது (இரண்டாம் வேற்றுமை; வினை; பின்முன்னுகத் தொக்க ஆறும் வேற்றுமை)த் தொகை.

24. "தோகை வந்தாள்" என்பதில் தோகை என்னும் சொல் (பண்புத் தொகை, உவமையாகுபெயர், அன்மொழித் தொகை)

25. "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" இதில் (ஊர், வேர், பகை) என்பது ஆகுபெயராகும்.

26. "எம்மம்பு கடி விடுதும்" இதில் கடி என்பது (பெயர், வினை, உரி)ச் சொல்லாகும்.

27. "மக்காள் வாரீர்" – இதில் மக்காள் என்பது (இயல்பான, ஈறுதிரிந்த, ஈற்றயல்திரிந்த) எட்டாம் வேற்றுமைப் பெயராகும்.

28. மரம் என்பது (காரணப்பெயர், இடுகுறிப் பொதுப்பெயர், காரண இடுகுறிப்பெயர்)

29. "பண்டு காடு மன்" என்பதன் எழுவாய் (பண்டு, காடு, இது) என்பதாகும்.

30. நரேந்திரன் என்னும் தொடர் (தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி) கொண்டதாகும்.

ஒழுங்கான வாக்கியத்தின் முன்னால் √ (சரி) என்ற அடையாளம் இடுக.

31. அ. இலக்குவன் இராமனுக்குத் தம்பியாவான் ..................

ஆ. இலக்குவன் இராமனது தம்பியாவான் ..................

32. அ. யாம் அச் செயலைச் செய்தவரல்லர் ..........................

ஆ. யாம் அச் செயலைச் செய்தோமல்லேம் .....................

33. அ. தான்பிறந்த நாட்டையும் தன் தாய் மொழியையும் நேசிக்காதவன் மனிதனேயில்லை ..................

ஆ. தான் பிறந்த நாட்டையும் தன் தாய் மொழியையும் நேசிக்காதவன் மனிதனே அல்லன் .....................

34. அ. எவ்வளவு இயற்கை வளம் இலங்கை நிறைந்திருக்கிறது என்பது அன்றுதான் தெரிந்தது .....................

ஆ. இலங்கை எவ்வளவு இயற்கை வளம் நிறைந்ததாயிருக்கிறது என்பது அன்று 'தான் தெரிந்தது .....................

35. அ. ஒவ்வொரு சிறுமிகளும் சீருடை அணிந்திருந்தனர் .........

ஆ. ஒவ்வொரு சிறுமியும் சீருடை அணிந்திருந்தாள் .........

பின் வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக.

36. ஒரு + பிடி + அவல் + தின்றான் .....................

37. சரணம் + அரவிந்தம் ..........................

38. செம்மை + சிறுமை + அடி ..........................

39. தென் + திசை + ஆறு + மண் ....................

40. கால் + தோல் + தவிர்த்து ....................

பின்வரும் தனி வாக்கியங்களை ஏற்ற வண்ணம் மாற்றியமைத்து ஒரே முற்று வினை கொண்டு முடியத்தக்கதாக எழுதுக.

41. தெருக் கோடியில் சனக்கூட்டமாயிருந்தது.

42. இவ்வாறு கூட்டத்தை ஒரு நாளும் இங்கு கண்டதில்லை.

43. அவ்விடத்திற்கு விரைந்து சென்றேன்.

44. நான் உயரம் குறைந்தவன்.

45. கூட்டத்தின் நடுவே அவலக்குரல்கள் கேட்டன.

46. என்னால் ஒன்றையும் காண முடியவில்லை.

47. பெரியவர் ஒருவரிடம் விசாரித்தேன்.

48. சிறுவன் ஒருவனைக் கார் மோதியதாக அவர் கூறினார்.

49. அக்காட்சியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கவில்லை.

50. அநுதாபத்துடன் வீடு திரும்பி விட்டேன்.

41 – 50. ...................... ...................... ......................

................ ................ ................ ................

................ ................ ................ ................

................ ................ ................ ................

................ ................ ................ ................

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

51. ஆசிரியர் கற்பித்தவை அனைத்தும் (நீர்மேல் எழுத்துப் போல், பசுமரத்தாணிபோல, பாலுந்தேனும் கலந்தாற் போல) நினைவில் நின்றன.

52. இன்று நம் நாட்டில் (காளான்கள் போல, கரடிபிறை கண்டதுபோல, பகலவன் முன் பனிபோல)ப் பல பத்திரிகைகள் காலத்திற்குக் காலம் தோன்றி மறைகின்றன.

53. பல வருடங்களின் பின் இன்று நான் எனது நண்பனைச் சந்தித்தது (ஊமைகண்ட கனவுபோல, பிறையைக் கண்டாற் போல, முயற்கொம்பு போல) இருக்கிறது.

54. வஞ்சகனான சகுனி பஞ்சபாண்டவருடன் (நகமும் சதையும் போல, பசுத்தோல் போர்த்த புலிபோல, மணியும் ஒளியும் போல)ப் பழகினான்.

55. வெவ்வேறு கொள்கைகளையுடைய இரு கட்சிகளையும் ஒன்றிணைக்க எத்தனை முயன்றாலும் அவை (குருடும் செவிடும் கூத்துப் பார்த்தது போல, மலரும் மணமும் போல, பச்சை மண்ணும் சுட்டமண்ணும் போல)வே இன்னும் இருக்கின்றன.

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களின் பொருளை உரிய இலக்கத்தின் நேரே எழுதுக.

நல்லார்க்கு (56) நல்குரவு நேரினும் இல்லார் போல் (57) இரந்து வாழார். இன்னல் அனைத்தும் (58) ஏகன் செயலென (59) உள்ளும் (60) பாங்கினர் கனவிலேனும் (61) கன்னக்கோல் பற்றி அறியார். (62) சாக்காடு எய்தினும் (63) இன்னா செய்ய (64) விளையார்.

56. ....................

57. ....................

58. ....................

59. ....................

60. ....................

61. ....................

62. ....................

63. ....................

64. ....................

பின்வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய குறியீடுகளை உரிய இலக்கத்தின் நேரே இடுக.

(65) ஏ (66) பிசாசே (67) எங்கடா போயிருக்கிறாய் (68) வலப் பக்கமாக ஓட்டு (69) உனக்கு வண்டியை ஓட்டவே தெரியவில்லை (70) வலப்பக்கத்திற் செலுத்து (71) என்று உள்ளேயிருந்த உத்தி யோகத்தன் கோபமாகக் கூறினான் (72).

65. ..................... 66. ..................... 67. .........

68. ..................... 69. ..................... 70 .........

71. ..................... 72. .....................

பின்வரும் உரைப் பகுதியைப் படித்துக் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சித்தர் பாடல்களை ஆழ்ந்து படித்தால், அவர்கள் வைதிக மதத் திற்கு எதிரானவர்களாகவே காணப்படுகின்றனர். வைதிக மதக் கொள்கைகள் பலவற்றைத் தாக்குகின்றனர். ஆனால், அவர்கள் தங்களை நாத்திகர்கள் என்றோ, உலகாயதர்கள் என்றோ வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளவில்லை; வெளிப்படையாகப் பாடவுமில்லை. கட வுள் அன்பர்கள் போலவே காட்சியளிக்கின்றனர். ஆயினும், சித்தர் களின் பாடல்களிலே உலகாயதத்தை, நாத்திகத்தைப் பற்றிய கண் டனங்களும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர்கள் தங்களை

73. ..................... என்றோ அல்லது.

74. ..................... என்றோ காட்டிக் கொள்ளவில்லை.

75. கடவுள் பேரில் நம்பிக்கையற்றவர்........................ எனப் படுவர்.

76. சித்தர்களால் தாக்கப்படுவன எவை? ..........................

77. உலகாயதம் என்றால் என்ன?

.................. .................. .................. ..................

78. இப்பந்திக்கு ஒரு தலையங்கமிடுக ........................

79. சித்தர் பாடல்களில் குறிப்பிடத்தக்க அமிசம் யாது?

.................. .................. .................. ..................

.................. .................. .................. ..................

80. சித்தர்கள் (ஒரு வழியில், பல வழிகளில், முற்றாக) நாத்திகர் கள் என்பது பொருந்தும்.
(சரியான விடையின் கீழ்க் கீறிடுக.)

## மாதிரி வினுப் பத்திரம்—8.

### ஜி. ஸீ. ஈ. சாதா. பரீட்சை.

### தமிழ் மொழி பகுதி—I.

நேரம்:- 40 நிமிடம்

(எல்லா விஞக்களுக்கும் இவ்விஞத்தாளிலேயே விடை தருக)

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களோடு தொடர் புடைய விஞக்களும் அவற்றுக்கான பல விடைகள் அடைப்புக் குறிக் குள்ளும் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கிறிடுக.

எதிரிகளையெல்லாம் நிர்மூலமாக்கி எதிர்ப்பார் யாருமற்ற சூழ் நிலையை உண்டாக்கிக் கொண்ட கொடுங்கோலன், தன் தலைமைப் பதவி நீடிப்பதின் அவசியத்தை உணர்த்துவதற்காகவும், நாட்டின் முன் னுள்ள பற்பல பிரச்சினைகளைத் தள்ளிப் போடுவதற்காகவும் நாட்டின் சீரழிவுக்குக் காரணம் சொல்வதற்காகவும் புதுப்புது வரிகள் போட்டு பொது சனங்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்காகவும் வெளிநாட்டுக் குழப்பம் போன்ற நெருக்கடிகளைக் கிளப்பி விட்டுக் கொண்டே இருப்பான்.

விஞக்கள்:—

1. "நிர் மூலமாக்கி" என்பதன் பொருள் (அழித்து, வேறுபடுத்தி, பகைத்து) ஆகும்.
2. "சூழ்நிலை" என்பது (வினை, பண்பு, உவமை)த் தொகை.
3. கொடுங்கோலன் என்பதற்கு (நெடுங்கோலன், குறுங்கோலன் செங்கோலன்) என்பது எதிர்ச் சொல்லாகும்.
4. தலைமை என்றால் (ஆட்சி, முதன்மை, சர்வதிகாரம்)
5. "உணர்த்துவதற்காக" என்பதன் பொருள் (தெரிவிக்க, புரிய வைக்க, அறிவிக்க) என்பதாகும்.
6. பிரச்சினை என்றால் (குழப்பம், கலகம், சிக்கல்)
7. "தள்ளிப் போடுவதற்காக" என்றால் (உதாசீனம், செய்வதற் காக, ஒத்திவைப்பதற்காக, ஒதுக்கி விடுவதற்காக)
8. "புதுப்புது" என்றால் (முன்னெப்போதுமில்லாத, வழமை யான, நாட்டிற்கேற்ற)

9. "வசூலிப்பதற்காக" என்பது (ஆரிய, திசை, திரி)ச் சொல்லாகும்.

10. குழப்பம் என்பதற்கு (தெளிவு, சுத்தம், அமைதி) என்பது எதிர்ச் சொல்லாகும்.

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

11. அவள் ஓர் அழகிய வைரமாலை (போட்டிருக்கிறாள், அணிந்திருக்கிறாள், தரித்திருக்கிறாள்)

12. ஒவ்வொரு சொல்லையும் கவனமாக (வாசித்தால், படித்தால், பார்த்தால்) மட்டுமேதான் பொருளை அறிய முடியும்.

13. வானொலியை (முடுக்கியதும், போட்டதும், திருப்பியதும்) திரை இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருப்பதை அறிந்தேன்.

14. எத் தொழிலைச் செய்பவராய் இருந்தாலும் கடமை (அறிவு, உணர்ச்சி, ஞானம்) உள்ளவராயிருக்க வேண்டும்.

15. இனிமேலும் குற்றமிழையாதிருக்க வேண்டுமென்று (கண்டித்து, தண்டித்து, எச்சரித்து) அவனை விடுதலை செய்தார் நீதிபதி.

16. காந்தி (மேற்படிப்புக்காக, மேல்ப்படிப்புக்காக, மேற்ப்படிப்புக்காக) இங்கிலாந்து சென்றார்.

17. (இழநீர், இளநீர், இளனி) பருகினேன்.

18. அவர் அரசாங்க (உஸ்தியோகஸ்தர், உத்தியோகஸ்தர், உஸ்தியோகத்தர்)

19. (தோள்பட்டை, தோள்ப்பட்டை, தோட்பட்டை) வலிக்கிறது.

20. (வேற்படை, வேற்ப்படை, வேல்ப்படை) வென்றது.

21. ஐம்பெரும் காப்பியங்களுள், (புறநானூறு, சூடாமணி, வளையாபதி) ஒன்றாகும்.

22. மலையும் மலை சார்ந்த பகுதியும் (குறிஞ்சி, முல்லை, மருதம்) எனப்படும்.

23. இலங்கையில் இன்று (சர்வாதிகார, இராணுவ, மக்கள்) ஆட்சி நடைபெறுகிறது.

24. அருகுதல் என்றால் (நெருங்கி வருதல், குறைந்து வருதல், பிரிதல்) எனப் பொருள்படும்.

25. "வாழ்க" என்பது (தெரிநிலை, ஏவல், வியங்கோள்) வினை முற்று.

26. உண்மைக்கு நன்மை; பொய்மைக்கு (நேர்மை, தீமை, மெய்ம்மை)

27. "நான்" என்ற சொல் இரண்டாம் வேற்றுமை உருபேற்றால் (என்னை, எனக்கு, என்னால்) என வரும்.

28. வகையாக மாட்டிக் கொண்ட திருடன் (திருதிரு, திடுதிடு, பளபள) வென விழித்தான்.

29. கோவலன் கொலையுண்டதைக் கேள்வியுற்ற கண்ணகி (மாலுமி யில்லா மரக்கலம்போல, அனலிடை மெழுகுபோல, அடை பட்ட கிளி போல) நெஞ்சழிந்து புலம்பினாள்.

30. எப்படியோ (குழையடித்து, கருவறுத்து, கையாண்டு) அவனை வசமாக்கி விட்டேன்.

பின்வரும் உரைப் பகுதியில், கீறிடப்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் பதிலாக அதே பொருளைத் தரும் வேறு சொல்லை அவ்விலக்கத்தின் நேரே எழுதுக.

கடந்த காலத் (31) <u>தவறுகளி</u>லிருந்து (32) <u>படிப்பினை</u> பெற்று, எதிர்காலத்தின் தவறுகளைத் (33) <u>தவிர்த்து</u> நடப்பதுதான் மனிதனுக்கு இருக்க வேண்டிய (34) <u>இயல்பு</u>. இந்த இயல்பில்லாவிடில் (35) <u>எஞ்ஞான்றும்</u> வாழ்விற் (36) <u>சித்தியடைய</u> (37) <u>இயலாது</u>.

31. .................... 32. ....................

33. .................... 34. ....................

35. .................... 36. ....................

37. ....................

வழுவற்ற வாக்கியத்தின் முன்னால் √ என்ற அடையாளமிடுக.

38. அ. இவர்களிற் சில பேர் நோயாளர் ..................

ஆ. இவர்களிற் சிலர் நோயாளர் ....................

39. அ. உங்கள் பாழடைந்த வீடெங்கே? ....................

ஆ. பாழடைந்த உங்கள் வீடெங்கே? ..................

40. அ. அவனிடம் நல்ல நூல்களுண்டு ......................

ஆ. அவனிடம் நல்ல நூல்கள் உள்ளன ..................

41. அ. இராமனுக்கு இலக்குவன் தம்பியாவான் ...... ............

ஆ. இலக்குவன் இராமனது தம்பியாவான் ...............

42. அ. இரண்டு அரசரும் ஒப்பந்தம் செய்தனர் .................

ஆ. அரசர் இருவரும் ஒப்பந்தம் செய்தனர் .....................

43. அ. நீ வந்தாய் அல்லவா? .......................

ஆ. நீ வந்தாய் அல்லையா? .......................

44. அ. முருகன் உனக்கு உயிரையும் தருவான் ....................

ஆ. முருகன் உனக்கு உயிரையும் கொடுப்பான் .................

45. அ. மூவுலகங்கள் நடுங்கின .......................

ஆ. மூவுலகங்களும் நடுங்கின .........................

"அ" பிரிவிலுள்ள ஒவ்வொன்றுக்குமுரிய ஒவ்வோர் உதாரணம் "ஆ" பிரிவிலுள்ளது. சரியான உதாரணத்தைக் கண்டு அதன் முன்னு ளுள்ள அடைப்புக் குறியுள் உரிய இலக்கமிடுக.

| "அ" | "ஆ" |
|---|---|
| 46. உயிரளபெடை | ( ) சாரைப்பாம்பு |
| 47. திசைச்சொல் | ( ) பூங்கொடி வந்தாள் |
| 48. ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம் | ( ) படாஅம் |
| 49. அன்மொழித் தொகை | ( ) அலவாங்கு |
| 50. வினைத்தொகை | ( ) எஃகு |
| 51. ஏவல்வினை | ( ) பாவை வந்தாள் |
| 52. இரு பெயரொட்டுப் பண்புப் பெயர் | ( ) நிறுத்து |
| 53. உவமையாகு பெயர் | ( ) குடிநீர் |

பின்வரும் உரைப் பகுதியிலுள்ள இலக்கமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய குறியீடுகளைத் தருக. ஒவ்வொரு குறியீடும் உரிய இலக்கத்தின் நேரே இடப்பட வேண்டும்.

அங்கே ஒரு கிழவன் தோணி விட்டுக் கொண்டு வந்தான் (54) (55) அண்ணே (56) அண்ணே (57) என்னையும் உன்னுடனேயே தோணியில் ஏற்றிக் கொள் (58) நான் புயற் காற்றில் அடிபட்டு மிகவும் நொந்து போயிருக்கிறேன் (59) என்று சொன்னேன் (60).

54. ..................... 57. ..................... 60. .........

55. ..................... 58. .....................

56. ..................... 59. .....................

பின்வரும் உரைப் பகுதியிலுள்ள சொற்களைச் சந்தி சேர்த்து எழுதுக. சந்தி சேர்க்கப்பட்ட புதிய வடிவத்தை அதற்குரிய இலக்கத்தின் நேரே எழுதுக.

பெரும் (61) கானில் (62) தனியே விடப்பட்ட சிறுவன் தான் (63) இருந்து (64) அழுது கொண்டு (65) இருந்த மரத்தின் (66) அடியிலேயே (67) உறங்கி விட்டான் மேற்கு (68) வானம் (69) சிவந்து சூரிய போர்வையை (70) போர்த்துக் கொண்டதை அ (71) சிறுவன் எவ்வாறு (72) அறிவான்.

61. .................. 64. .................. 67. ...............

62. .................. 65. .................. 68. ...............

63. .................. 66. .................. 69. ...............

70. .................. 71. .................. 72. ...............

பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அடியில் வினவப்படுவனவற்றுக்கு விடை தருக.

குருடனைப் பார்த்து இரக்கப்படுகிறோம். ஐயோ பாவம்: வெயிலையும் மழையையும் நிலவையும் இவனால் பார்க்க முடியவில்லையே! உலக முழுவதும் அழகுத் தெய்வம் நர்த்தனம் புரிகிறாளே, இவனுக்கு என்ன பயன்! குழந்தை சிரிக்கின்றது; இளம் பெண் ஒருத்தியின் மதர்த்த விழிக்கடையில் நாணம் படர்கிறது; காயாம்பூ மலர்கிறது;

கொன்றை தழல் சொரிகிறது; தாயின் அரவணைப்பை நோக்கி கன்று துள்ளி ஓடுகிறது; வானமும் வயலும் வண்ண மேலாப்பின் கீழ் அழகைப் பயிர் செய்கின்றன. இவற்றையெல்லாம் குருடன் கண்டானா?

வினாக்கள்:—

73. நர்த்தனம் என்றால் (ஆட்சி, நடனம், திருமணம்) ஆகும்.

74. இளம் பெண்ணின் விழிக்கடையில் .................. படர்கிறது.

75. ..................... சிரிக்கின்றது.

76. தெய்வம் எதற்கு உருவகமாகின்றது? .....................

77. தழல் என்பது (இயற்பெயர், காரணப் பெயர், ஆகுபெயர்).

78. "பயிர் செய்கின்றன" என்றால் என்ன? ..................

79. இதற்கொரு தலையங்கமிடுக ...........................

80. இப் பகுதியை வாசிக்கும் போது (அனுதாபம், சிரிப்பு, வெறுப்பு) உண்டாகின்றது.

# மாதிரி வினாப் பத்திரம்—9.

## ஜீ. ஸீ. ஈ. சாதா. பரீட்சை.

## தமிழ் மொழி பகுதி—I

நேரம் 40 நிமிடம்

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை தருக.)

1 – 10 வரையுமுள்ள வாக்கியங்களில் கீறிடப்பட்டுள்ள இடை வெளிகளைப் பின்வரும் இணை மொழிகளுட் பொருத்தமானதைக் கொண்டு நிரப்புக.

பேரும் புகழும், கோட்டை கொத்தளம், சாடைமாடை, ஏறக் குறைய, எலும்புந் தோலும், தடல்புடல், துன்பதுயரம், தவிடு பொடி, தங்குதடை, சூதுவாது.

1. திருவள்ளுவர் .................... இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராவர்.

2. அங்கவை சங்கவை ஆகியோரின் திருமணம் எவ்வித ........... களுமின்றி நடந்தேறியது.

3. உனது எண்ணத்தை என்னிடம் ....................யாகவாவது சொல்லியிருந்தால் உனக்கு உதவியிருக்க முடியும்.

4. குழந்தைகள் .................... அறியாதவர்கள்.

5. எவரும் பகிர்ந்து கொள்ளாத காரணத்தினால் அவனது .................... மேலும் அதிகரித்தது.

6. .................... மிக்க காந்தி மகான் கூட வெள்ளாட்டைக் கொன்றிருக்கிறார்.

7. தலைவியைக் காணும் வேட்கையுற்ற தலைவன் பயங்கரம் நிறைந்த .................... பலவற்றையும் தாண்டினான்.

8. அந்தப் பேச்சாளர் எவ்வித ....................யுமின்றி ஆற்றொழுக்கெனச் சொற்பெருக்காற்றினார்.

9. வறுமையில் வாடிய புலவரின் மேனி ....................மாகக் காட்சியளித்தது.

10. அரசாங்கக் கட்டிடங்கள் பயங்கரவாதிகளால் ................ யாக்கப்பட்டன.

சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

11. ஐது என்ற சொல்லின் எதிர்ச்சொல் (நொய்ம்மை, செறிவு, திரள்).

12. சீரியர் என்பதற்கு (பூரியர், தீயர், வறியர்) என்பது எதிர்ச் சொல்லாகும்.

13. கழுதையின் மலம் விட்டை; காகத்தின் மலம் (எச்சம், சாணம், பிழுக்கை).

14. மிளகாயின் வித்து விதை, பலாவின் வித்து (கொட்டை, பருப்பு, மணி).

15. தென்னையின் இளங்காய் குரும்பை; வாழையின் இளங்காய் (வடு, பிஞ்சு, கச்சல்).

16. மானின் ஆணினம் கலை; நரியின் ஆணினம் (ஏறு, ஓரி, களிறு).

17. குரங்கின் பெண்ணினம் மந்தி; யானையின் பெண்ணினம் (பிணை, பிடி, நாகு).

18. ஜகம் என்பது ஆரியச் சொல்; சகம் என்பது (திரிசொல், தமிழ்ச் சொல், வட சொல்).

19. இலை, தழை, கொண்டு செய்யப்பட்ட குடிசை (பன்னசாலை, பாசறை, கூடாரம்).

20. கடவுள் இருக்கிறான் என நம்புபவன் (நாத்திகன், பக்தன், ஆத்திகன்) ஆவான்.

21. வாக்கியப் பொருளின் தெளிவுக்கு (பெயர், வினை, இடை)ச் சொல் முக்கியமாகும்.

22. "கண்டனர்" என்னும் வினைச் சொல் (காண், கண், கண்டு) என்னும் வினையடியிற் பிறந்தது.

23. "தெளிக நீ நெஞ்சே" என்னும் வாக்கியத்திற்கு (நீ, நெஞ்சே, தெளிக) என்பது எழுவாயாகும்.

24. "சாரைப்பாம்பு" என்னும் தொடர் (வேற்றுமை, இரு பெய ரொட்டுப் பண்பு, அன்மொழி)த் தொகையாகும்.

25. அது என்னும் சொல் (உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், குற்றியலுகரமன்று, இடைத் தொடர்க் குற்றியலுகரம்).

தடித்த எழுத்திலுள்ள சொற்களின் பொருளை உரிய கோட்டில் எழுதுக.

கோபியர் <u>நாப்பண்</u> அமர்ந்து குழலிசை <u>பெய்தான்</u>.

26. ..................... 27. .....................

எதிரிகள் <u>சைனியம்</u> பல <u>திக்கிலும்</u> சிதைந்தது.

28. ..................... 29. .....................

ஐயன்மீர், <u>பைங்கூழை</u> மென்றது <u>இடபமாகும்</u>.

30. ..................... 31. .....................

<u>பேதையர்க்கு</u> அறிவு <u>கொளுத்தினர்</u>.

32. ..................... 33. .....................

<u>செருக்களத்தில்</u> வீரர் பலர் <u>விண்போந்தனர்</u>.

34. ..................... 35. .....................

பின்வரும் உரைப் பகுதியில் இலக்கமிடப்பட்டுள்ள இடங்களில் வரவேண்டிய குறியீடுகளை உரிய இலக்கத்தின் நேரே எழுதுக.

பரதன் பரிவாரங்களை நோக்கி (36) (37) கங்கைக் கரையை அண்மி விட்டோம். (38) என்று கூறிக் கொண்டிருக்கும் அதே வேளையில் (39) அக்கரையில் நின்று கொண்டிருந்த குகன் தன் சகபாடிகளிடம் (40) (41) அதோ (42) பரதன் (43) சகோதர பாசத்தையே மறந்துவிட்ட கயவன் (44) எம்பெருமான் மீது போர் தொடுக்க வந்துள்ளானே (45) இவனை ஆற்றைக் கடந்து செல்லவும் நாம் விடுவதோ (46) என்று சிங்கம் போற் கர்ச்சித்தான் (48).

36. ..................... 43. .....................

37. ..................... 44. .....................

38. ..................... 45. .....................

39. ..................... 46. .....................

40. ..................... 47. .....................

41. ..................... 48. .....................

42. .....................

"அ" பகுதியிலுள்ள ஒவ்வொன்றுக்குமுரிய ஒவ்வோர் உதாரணம் "ஆ" பகுதியில் தரப்பட்டுள்ளது. பொருத்தமான உதாரணத்தின் முன்னுலுள்ள அடைப்புக் குறிக்குள் உரிய இலக்கமிடுக.

"அ"

49. குறிப்பு வினைப் பெயரெச்சம்
50. பால்பகா அஃறிணைப் பெயர்
51. முற்றியலுகரம்
52. இரட்டைக் கிளவி
53. திரிசொல்
54. பண்புத் தொகை
55. ஏவல் வினை
56. தொழிற் பெயர்
57. உரித் தொடர்
58. சினையாகு பெயர்

"ஆ"

( ) வையகம்
( ) சலசல
( ) முகமதி
( ) வா
( ) சமைத்தல்
( ) நல்ல
( ) வெற்றிலை நட்டான்
( ) நனிபேதை
( ) பானு
( ) மண்.

பின்வரும் தொடர்களைப் பிரித் தெழுதுக.

59. செஞ்ஞாயிற்றெளி ....................
60. முட்டாட்டாமரை ....................
61. ஒரூரதிபன் ....................
62. தொண்ணூறு ....................
63. ஆணோ வலியோவரிவையோ ....................
64. புன்னுனி மேனீர் ....................
65. கடறுவுபடலம் ....................

பின்வரும் மரபு மொழிகளுக்கான பல்வேறு பொருள் கொண்ட விடைகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

66. திறந்து பேசுதல் (தலைமை வகித்தல்; ஆரம்பத்தில் பேசுதல்; மனம் விட்டுப் பேசுதல்).

67. பதம் பார்த்தல் (நிலைமை அறிதல், சுவையை அறிதல், வருந்துதல்).

68. பூசி மெழுகுதல் (அழகு செய்தல், குற்றத்தை மறைக்கப் பார்த்தல்; செப்பனிடல்).

69. மற்கடமுட்டி (விட்டுக் கொடுக்காத தன்மை; உடைந்த பானை, மல்யுத்த வீரன்).

70. புளிப்பிடித்தல் (பழுதடைதல், கருவம் மிஞ்சுதல், சுவையற்றுப் போதல்).

71. மண்டையுடைத்தல் (அதிகம் சிந்தித்தல், நெற்றியை உடைத்தல், கொலை செய்தல்).

72. திரிசங்கு சுவர்க்கம் (மோட்சம், இரண்டும் கெட்டநிலை, ஒருலகம்).

பின்வரும் உரைப் பகுதியைப் படித்துக் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கைகேசியின் அந்தப்புரம் பொலிவிழந்து கிடந்தது. சுடலையில் தோன்றும் இறுதி ஈமத்தீயின் சாயலிலே, நெய்வற்றிய விளக்குகள் தத்தம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தன. நெடுநேரம் அங்கே மயானத்தின் அமைதி நிலவிக் கொண்டிருந்தது. சாமக் கோழியின் குரல் சவம் போற் கிடந்த தசரதனின் ஆகத்தைச் சற்றே அசைத்தது. தன் உடலிலுள்ள சக்தியெல்லாம் ஒன்று திரட்டி எழ முயன்றான்; முகத்தை மட்டும் நேரே நிமிர்த்த முடிந்ததே தவிர எழுந்திருக்க இயலவில்லை. கண்களில் ஊற்றெடுத்துக் கன்னங்களையெல்லாம் நனைத்திருந்த கண்ணீர் காய்ந்தும் காயாத நிலையில் இருப்பது அந்த மங்கிய ஒளியிலும் நன்கு தெரிகின்றது. கைகேசியின் பக்கம் தன் கண்களைத் திருப்புகின்றான் தசரதன். வெந்நீர் திரையிட்டிருக்கும் அவனது கண்களின் பார்வையிலே ..................

செருக்களத்தின் உதிரப் பெருக்கையும் நிணக் கூழையும் அருந்தி, ஆயாசம் தீர்ந்த பேயொன்று மலரணையில் அமைதியாகத் துயில் கொண்டிருந்தது.

வினா

சக்தியெல்லாம் ஒன்று திரட்டி எழ முயன்ற தசரதனுக்கு

73. ..................... இயன்றதே தவிர

74. ............... இயலவில்லை.

75. "விளக்குகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தன" என்றால் என்ன? ............... ............... ......................

76. உதிரப்பெருக்கு............... ............... ............

77. நிணக் கூழ் ............... .... .......... ............................
(இவற்றின் பொருளை இடைவெளியில் எழுதுக)

78. இவ்வுரைப் பகுதியில் குறிப்பிடப்படும் பேய் யார்?
.................. .................. .................. ..................

79. இதற்கொரு தலையங்கமிடுக ...........................

80. இவ்வுரைப் பகுதியை வாசிக்கும் போது (சிரிப்பு, வீரம், துக்கம், பயங்கரம்) உண்டாகின்றது.

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

## மாதிரி வினாப்பத்திரம்—10.

### ஜி. ஸீ. ஈ. சாதா. பரீட்சை

### தமிழ் மொழி பகுதி—I

நேரம்:- 40 நிமிடம்.

(இவ் வினாத் தாளிலேயே விடை தருக)

பின்வரும் உரைப் பகுதியில் கீறிடப்பட்ட சொற்களிலிருந்து வினவப்படும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

வானொலியை முடுக்கி விட்டேன். எனக்கு மிகவும் பிடித்தமான புல்லாங்குழலிசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சாய்மணையில் அமர்ந்து கால்களை வெளியே நீட்டியவாறே கண்களை மூடிக் கொண்டு, உடலைச் சாய்த்துக் கொண்டேன். வேய்ங்குழல் மன்னனை முகில் வண்ணன்தான் மறுபிறவியெடுத்து வந்தானோ! ஈடிணையற்ற அந்தக் கலைஞனின் இசை வெள்ளம் கோடானுகோடி உயிரணுக் களின் சேர்க்கையாய் என் முன்னே பிரவகித்து வந்தது. வெள்ளம் எனையும் தழீஇ அணைத்தது. இயங்கு புலன்கள் அனைத்தும், அடங்கி, ஒடுங்கி.........? அப்பால் .........??

வினாக்கள்:—

1. தெரி நிலைவினைமுற்று ..................
2. பண்புத் தொகை ....................
3. வேற்றுமைத் தொகை ........................
4. இணைமொழி ....................
5. உயிரளபெடை ......................
6. வினையெச்சம் ....................
7. திரிசொல் ....................
8. இரண்டாம் வேற்றுமை உருபேற்ற சொல் ....................
9. உவமைத் தொகை ..................
10. வினைத் தொகை ..................

பின்வரும் வாக்கியங்களிற் "பெருமை" என்னும் பண்படியாகப் பிறந்த சொற்கள் கீறிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தரும் பொருளில் எது மிகப் பொருத்தமானது என்பதை அடைப்புக் குறிக்குள் இருப்பனவற்றுளிருந்து தேர்ந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுக.

11. மகாத்மா காந்தி பெருந்தன்மை கொண்டவர். (அளவிற் பெரிய, எவருக்குமுள்ள, பண்பட்ட) தன்மை.

12. பெரும் பெரும் மனிதர்களெல்லாம் இங்கு வருகிறுர்கள் (அதிகம் படித்த, பிரபல்யமான, செல்வமுள்ள).

13. மகா அலெக்ஸாந்தர் பேராண்மை படைத்தவர். (படைப்பல மிக்க, துணிவு, அதிகவலிமை)

14. அவன் ஒரு பெரிய வீட்டுப் பையன். (அறைவசதியுள்ள, பிறர் மதிக்கும், பலமாடி கொண்ட)

15. பேராசிரியர் விரிவுரை நிகழ்த்தினுர். (பேசத் தெரிந்த, அறிவாற்றலுள்ள, விஞ்ஞானம் அறிந்த)வர்.

அடைப்புக் குறிக்குள் இருக்கும் விடைகளுட் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

16. தன் பொருளையுணர்த்தாமல் தன்னேடு தொடர்புடைய பிறிதொன்றை உணர்த்தத் தொன்று தொட்டு ஆகிவருவது (அன்மொழித்தொகை, ஆகுபெயர், பண்புப் பெயர்)

17. வேற்றுமை உருபுகளை ஏற்காதது. (வினைச்சொல், பெயர்ச்சொல், வினையாலணையும் பெயர்)

18. உடநிகழ்ச்சிப் பொருளை உணர்த்துவது (ஐந்தாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை, ஆரும் வேற்றுமை)

19. இடைச் சொற்கள் மறைந்து நிற்கும் தொடர் (தொகைநிலை, தொகாநிலை, வாழாநிலை).

20. கற்ருேர்க்கு மட்டுமே பொருள் தெரிந்த சொல் (திரிசொல், திசைச்சொல், வட சொல்).

21. காலத்தையும் உணர்த்தும் பெயர்ச் சொல் (பெயரெச்சம், வினையாலணையும் பெயர், ஆகுபெயர்).

22. "சிலர்" என்பது (பாற்பொதுப் பெயர், ஆண்பால், பெண்பால்).

23. பாட்டில் ஓசை குறைந்தவிடத்து அதை நிறைக்கத் தன் மாத்திரையில் மிக்கொலிப்பது (குறுக்கம், அளபெடை, ஆய்தம்).

24. "எல்லாம்" என்பது (ஆகுபெயர், மூவிடப்பொதுப் பெயர், இயற்பெயர்).

25. "வாழ்க" என்பது (வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினை, சிறப்புவினை).

26. (நந்நூல், நன்நூல், நன்னூல்) தமிழிலக்கண நூல்களி லொன்று.

27. (அஞ்னூறு, ஐந்நூறு, ஐநூறு) ரூபா வேண்டும்.

28. வஞ்சகர் கூட்டம் (அழிந்தது, அழிந்தன, அழிந்தனர்).

29. மழைத் (துள்ளி, துளி, துழி) வீழ்ந்தது.

30. பாஞ்சாலி (துகில், துகிலை, துகிலோடு) உரியப்பட்டாள்.

31. தச்சன் ஆயுதங்களை (பிரயோகித்தான், பாவித்தான், உப யோகித்தான்).

32. புலி (சீறியது, கர்ச்சித்தது, உறுமியது).

33. கடையில் பொருட்களை (வாங்கினன், வேண்டினன், எடுத் தான்).

34. முனிவர்கள் வசிக்குமிடம் (விடுதி, ஆச்சிரமம், அந்தப்புரம்).

35. ஐம்பதாவதாண்டிலே கொண்டாடப்படும் விழா (வெள்ளி விழா, வைரவிழா, பொன்விழா).

ஒழுங்கான வாக்கியத்தின் முன்னல் √ என்ற அடையாளமிடுக.

36. அ. அவன் மரத்தால் விழுந்தான் ....................
ஆ. அவன் மரத்திலிருந்து விழுந்தான் ....................

37. அ. அந்தக் கிழடு தட்டிய வாலிபனுடைய குதிரை எங்கே? ................ ................ ................ ................
ஆ. அந்த வாலிபனுடைய கிழடு தட்டிய குதிரை எங்கே? ................ ................ ................ ................

38. அ. எனது நூல்களில் நான்கு கிழிந்து விட்டன ..............
ஆ. எனது நூல்களில் நான்கும் கிழிந்து விட்டன ..............

39. அ. காட்டில் ஓர் பன்றியைக் கண்டேன் ......................
ஆ. காட்டில் ஒரு பன்றியைக் கண்டேன் ..............

40. அ. அவனையேன் அடித்தாய்? ....................
ஆ. அவனுக்கேன் அடித்தாய்? ..............

24. "எல்லாம்" என்பது (ஆகுபெயர், மூவிடப்பொதுப் பெயர், இயற்பெயர்).

25. "வாழ்க" என்பது (வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினை, சிறப்புவினை).

26. (நந்நூல், நன்நூல், நன்னூல்) தமிழிலக்கண நூல்களி லொன்று.

27. (அஞ்னூறு, ஐந்நூறு, ஐநூறு) ரூபா வேண்டும்.

28. வஞ்சகர் கூட்டம் (அழிந்தது, அழிந்தன, அழிந்தனர்).

29. மழைத் (துள்ளி, துளி, துழி) வீழ்ந்தது.

30. பாஞ்சாலி (துகில், துகிலை, துகிலோடு) உரியப்பட்டாள்.

31. தச்சன் ஆயுதங்களை (பிரயோகித்தான், பாவித்தான், உப யோகித்தான்).

32. புலி (சீறியது, கர்ச்சித்தது, உறுமியது).

33. கடையில் பொருட்களை (வாங்கினன், வேண்டினன், எடுத் தான்).

34. முனிவர்கள் வசிக்குமிடம் (விடுதி, ஆச்சிரமம், அந்தப்புரம்).

35. ஐம்பதாவதாண்டிலே கொண்டாடப்படும் விழா (வெள்ளி விழா, வைரவிழா, பொன்விழா).

ஒழுங்கான வாக்கியத்தின் முன்னால் √ என்ற அடையாளமிடுக.

36. அ. அவன் மரத்தால் விழுந்தான் ....................
ஆ. அவன் மரத்திலிருந்து விழுந்தான் ....................

37. அ. அந்தக் கிழடு தட்டிய வாலிபனுடைய குதிரை எங்கே? ................ ................ ................ ................
ஆ. அந்த வாலிபனுடைய கிழடு தட்டிய குதிரை எங்கே? ................ ................ ................ ................

38. அ. எனது நூல்களில் நான்கு கிழிந்து விட்டன ..............
ஆ. எனது நூல்களில் நான்கும் கிழிந்து விட்டன ..............

39. அ. காட்டில் ஓர் பன்றியைக் கண்டேன் ......................
ஆ. காட்டில் ஒரு பன்றியைக் கண்டேன் ..............

40. அ. அவனையேன் அடித்தாய்? ....................
ஆ. அவனுக்கேன் அடித்தாய்? ..............

குணசேன

9-31-6/9

விலை ரூ 3/50